விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

**Thamil Naatham**

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 | தாளம் 67 | வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 04 வியாழக்கிழமை (20.09.2012) | பக்கங்கள்: பதினாறு

# அழுத்தம் கொடுக்கிறோம் இலங்கைக்கு; ஆனாலும் தீர்வு இன்னும் இல்லை



நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டபோது பிடிக்கப்பட்ட படம்...

### யாழ்.ஆயருடனான சந்திப்பில் அமெரிக்கத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு அரசாங்கத்திற்கு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றோம். இருந்தும் அதற்கான தீர்வுகள் இன்னமும் எட்டப்படவில்லை என்று இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவர் மிச்செல் ஜே.சிசன் தெரிவித்தார்.

02

## யாழ்.பொதுசன நூலக எரிப்பு வேதனைக்குரிய சம்பவம்

### யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

"தெற்காசியாவிலேயே சிறந்ததாகக் கருதப்பட்ட யாழ்.பொதுசன நூலகம் தீ வைத்து எரிக்கப்பட்டமை வேதனைக்குரியது" என்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த புதிய அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே.சிசன் கூறினார். கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்கு முன்னர் இலங்கையில் அமெரிக்கத் தூதுவராகப் பதவியேற்ற

02

## அதிபர்கள், ஆசிரியர்களின் விருப்பத்தின் பேரிலேயே வடக்கில் இடமாற்றம் இடம்பெறும்

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

"அதிபர்கள், ஆசிரியர்கள் விருப்பத்துக்கு மாறாக எந்தவொரு இடமாற்றமும் இடம்பெறமாட்டாது. ஒரே பாடசாலையில் ஏழு வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்கள், அவர்களுக்குப் பொருத்தமான, அவர்கள் விரும்பும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்படும் என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின்

02

## பிரிட்டனில் தஞ்சம் மறுப்பு; அறுபது இலங்கையர் நாடு திரும்புகின்றனர்

(கொழும்பு)

லண்டனில் விஸா மறுக்கப்பட்ட 60 பேர் இன்று இலங்கை திரும்புவதாக குடிவரவு மற்றும் குடியகல்வு பிரதான கட்டுப்பாட்டாளர் சூலாந்த பெரேரா தெரிவித்தார். இவர்கள் விசேட விமானம் மூலம் இன்று கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைவர்.

திருப்பியனுப்பப்படுவர்களுள் பெரும்பாலானோர் அந்நாட்டின் அகதி அந்தஸ்து கோரி நிராகா-ிக்கப்பட்டவர்கள் ஆவர். மேலும் பலர் தமது விஸா

02

## ஜனாதிபதி இந்தியாவுக்கு பயணமானார்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். இவர் இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் காஞ்சி நகரில் அமைக்கப்படவுள்ள பௌத்த பல்கலைக்கழகத்திற்கு அடிக்கல் நாட்டுவிழாவில் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் கைது

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் சஞ்சீவ பண்டார கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு குற்றத்

02

## வைகோவும் ஆதரவாளர்களும் மத்திய பிரதேசத்துக்குள் செல்லத் தடை

(மத்திய பிரதேசம்)

இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்துவதற்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடன் இந்திய மத்திய பிரதேச மாநிலத்துக்கு சென்ற ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ மத்திய பிரதேச எல்லையில் வைத்தே பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

மத்திய பிரதேச மாநிலம் சாஞ்சியில் நிர்மாணிக்கப்படவுள்ள சர்வதேச பௌத்த பல்கலைக்கழகத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை இடம் பெறவுள்ளது. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

ஜனாதிபதியின் இந்திய

02

## முல்லைத்தீவில் ஐ.நா.பிரதிநிதிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்குடியேற்றம் கண்ணிவெடி அகற்றல் அபிவிருத்தி சட்ட அமுலாக்கல் மக்களின் வாழ்க்கைத் தரம் குறித்து ஐ.நா பிரதிநிதிகள் கேட்டறிந்து கொண்டதாகவும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து அவர்கள் திருப்தி தெரிவித்ததாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி சந்திப்பை முடித்துக்கொண்டு ஐ.நா.

02

## முதலமைச்சர் பதவி கிடைக்காதது ஏன்? பிள்ளையான் விளக்கம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சராக மீண்டும் தான் வரமுடியாது என்பதை தேர்தல் முடிவுகள் மூலம் தன்னால் உணர்ந்து கொள்ள முடிந்ததாக முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்

கிழக்கு மாகாண சபைக்கு மீண்டும் உறுப்பினராக தெரிவான இவர் ஜனாதிபதியின்

02

## 'முஸ்லிம்களின் அப்பாவித்தனம்' எதிர்த்து கிழக்கில் ஆர்ப்பாட்டங்கள்

(மட்க்களப்பு)

நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் நோக்கில் அமெரிக்காவில் வெளியிடப்பட்ட 'முஸ்லிம்களின் அப்பாவித்தனம்' திரைப்படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, சம்மாந்துறை, நற்பிட்டிமுனை, மத்தியமுகாம், சவளக்கடை ஆகிய பிரதேசங்களில் எதிர்ப்புப் பேரணிகளும் ஹர்த்தாலும் இடம் பெற்றுள்ளன.

02

# தமிழர்களுக்கு எதிராக யுத்தம் செய்யவில்லை

## - ஐ.நா. அதிகாரிகளிடம் யாழ்.தளபதி

தமிழகர்களுக்கு எதிராக யுத்தம் செய்யப்படவில்லை என இராணுவம் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தம் மேற்கொள்ளப்படவில்லை என்று யாழ் கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

புலிப் பயங்கரவாதிகளுக்கு எதிராகவே, யுத்தம் செய்யப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்தின் போது மக்கள் எதிர்நோக்கிய அவலங்களைத் தான் நேரில் பார்வையிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் மக்களின் அடிப்படைத் தேவைகளை அடையாளம் கண்டு அவை பூர்த்தி செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பல தலைமுறைகளாக தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

துரதிஷ்டவசமாக சில தமிழ்த் தலைவர்களின் பிழையான வழிகாட்டலினால் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராட்டம் நடத்தியதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

பெரும்பான்மையான தமிழ் மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை எனவும் அவர் கூறினார்.

# சமூக சேவையாளர் இரத்தினம் நினைவு தின நிகழ்வு

கைதடி நவபுரம் கட்டிட ஒப்பந்தக்காரரும், சமூகசேவையாளருமான அமரர் சி. இரத்தினத்தின் இரண்டாவது ஆண்டு நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணிக்கு கைதடி நவபுரத்தில் நடைபெறவிருக்கிறது.

நவபுரம் நவசமூகத்தின் ஏற்பாட்டில் சங்கரன் தங்கராசா தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்நிகழ்வில் மு. கயோதரன் வரவேற்புரை நிகழ்த்தவிருப்பதுடன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன் நினைவுக்கல்லை நட்டிவைப்பார்.

ஒலிப்பேழை வெளியீடு மற்றும் நினைவுரைகளைத் தொடர்ந்து சி. மதியழகன் வழங்கும் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் நிறைவுபெறும். (க)

# ஜனாதிபதி நாளை சாஞ்சியில் அடிக்கல் நாட்டுவார்

மத்திய பிரதேசத்திலுள்ள சாஞ்சியில் சர்வதேச பௌத்த பல்கலைக்கழகம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லினை நாளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டிவைப்பார்.

இதனை இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சியாளரென கௌரவிக்கப்படும் அநகாரிக தர்மபாலவிற்கு செய்யப்படும் ஒரு புகழ்மாலை என்று புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் பணிபுரியும் சுதீஸ் வரசேனாதீர பாராட்டியுள்ளார்.

# 400 ஆசிரியர்கள் சம்மதம்

நடந்து முடிந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியை ஆரம்பிப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுடன் எதிர்வரும் 24ஆம் திகதி விசேட கூட்டமொன்றை நடத்தவிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் புஷ்பகுமார தெரிவித்தார்.

# சென்னையில் நேற்றும் அமெரிக்க தூதரகம் முன் வன்செயல்கள்

'முஸ்லிம்களின் அப்பாவித்தனம்' என்ற சர்ச்சைக்குரிய படத்தைக் கண்டித்து நேற்றும் பெருந்திரளான முஸ்லிம் மக்கள் சென்னையிலுள்ள அமெரிக்க கொன்சலர் அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்க கொன்சலர் அலுவலகத்துக்குள் செல்ல முடியாதபடி போடப்பட்ட தடைகளையும் தாண்டி அமெரிக்க அலுவலகத்துக்குச் சமீபமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் சென்றனர். அண்ணாசாலையில் மவுண்ட் ரோட் தர்க்காவிலிருந்து ஸ்பென்சர் பிளாஸா வரை ஒரே வன்செயல் சம்பவங்களே காணப்பட்டன. பொலிசார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர். கிட்டத்தட்ட 25 இஸ்லாமிய அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்குபடுத்தினர். ஆர்ப்பாட்டக் காரர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர். நேற்று ஐந்தாவது நாளாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## முதலமைச்சர் பதவி கிடைக்காதது..(தொடர்)

ஆலோசகர்களில் ஒருவராகவும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாணத்தின் புதிய முதலமைச்சராக நஜீப் ஏ மஜீத் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பி.பி.சி தமிழோசைக்கு கருத்து தெரிவித்த அவர் , ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லாத நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், இதன் காரணமாகவே நஜீப் ஏ மஜீத் நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் தெரிவித்தார்.

இதனை விட விருப்பு வாக்குகளில் மிகக் கூடுதலான வாக்குகளை முதலமைச்சர் பதவிக்குரியவர் பெற்றிருக்க வேண்டும் .அல்லது தமது கட்சி ஆகக் குறைந்தது 3 ஆசனங்களைப் பெற்றிருக்க வேண்டும் .

அதில் ஒன்று கூடச் சாத்தியப்படாததன் காரணமாகவே தன்னால் தங்களால் முதலமைச்சர் பதவியை பெற முடியாது போனதாகவும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்

ஏற்கனவே முதலமைச்சர் பதவி வகித்து பல பணிகளை முன்னெடுத்த தான், பின்னர் அமைச்சர்கள் வாரியத்தில் இருப்பது என்பது நடை முறைக்கு சாத்தியமற்றது என்றும், அமைச்சர்கள் ஒதுக்கீடு தொடர்பாக அரசாங்கத்திலும் சில சங்கடங்கள் இருந்தன. இதன் காரணமாகவே தான் அமைச்சர பதவியைப் பெற விரும்பவில்லை என சிவனேசதுரை சந்திரகாந்தன் கூறுகின்றார்

அமைச்சரவையில் இம் முறை தான் இடம் பெறாத காரணத்தினால் தமிழர்கள் எவரும் இடம் பெறக் கூடிய வாயப்புகள் கை நழுவிப்போனது என்பதை ஏற்றுக் கொண்ட அவர் தொடர்ந்தும் மாகாண சபை உறுப்பினராக இருக்க வேண்டிய தேவை தனக்கு இருப்பதாகவும் கூறுகின்றார்

மாகாண சபை உறுப்பினர் பதவியுடன் ஜனாதிபதியின் ஆலோசகர் பதவி மூலம், தன்னால் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை தான் தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாகவும் சிவனேசதுரை சந்திரகாந்தன் குறிப்பிட்டார்.

## அதிபர்கள், ஆசிரியர்...(தொடர்)

பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரன் தெரிவித்தார். ஏழு வருடங்களில் ஒரே பாடசாலையில் பூர்த்தி செய்த அனைவருக்கும் இடமாற்றம் வழங்கப்படுமெனவும் அவர் கூறினார்.

வடமாகாணத்தில் அதிபர்கள், ஆசிரியர்களின் விருப்பத்துக்கு மாறாக எந்தவொரு இடமாற்றங்களும் இடம்பெறமாட்டாது. என்று அவர் நேற்று விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியே தேசியப் பாடசாலை ஆசிரியர்களின் இடமாற்றம் இடம்பெறுமெனவும் தேசியப் பாடசாலையொன்றில் 8 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்கள் அனைவருக்கும் இடமாற்றம் வழங்கப்படும் என்றும் தெரிவிககப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 24ஆம் திகதி வடமாகாண கல்வித் திணைக்களத்தில் மாகாண கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற அதிபர், ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக ஊடகங்களில் தவறான செய்திகள் வெளிவருவதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கபட்டுள்ளது. அதிபர்களின் இடமாற்றம் தொடர்பாக மாகாண [illegible] வியமைச்சு பரிசீலனை செய்து வருவதாகவும் அவை தொடர்பாக சபை கூடி முடிவெடுக்கப்படும் எனவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனைத்து...(தொடர்)

தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, பல்கலைக்கழகங்களை திறக்குமாறு வலியுறுத்தி பேராதனையில் சத்தியாக்கிரகம் இடம்பெற்றது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களது பிரச்சினைகளை தீர்த்து உடன் பல்கலைகழகங்களை திறக்குமாறு கோரியே பேராதனை கல்கலைகழக மாணவர்கள் குழு ஒன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை முதல் கண்டி ஜோர்ஜ் ஈ.டி. சில்வா பூங்காவில் சத்தியக்கிரகத்தில் ஈடுபட்டு வந்தனர்.

கண்டி பொலிஸார் மேற்படி சத்தியாகிரகத்தை கைவிடுமாறு கேட்டுக்கொண்ட போதும் அதனை பொருட்படுத்தாது தொடர்ந்தும் சத்தியாகிரகத்தை நடத்தி வருகின்றனர்.

## முஸ்லிம்..(தொடர்)

இதனால் முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், தனியார் மற்றும் பொதுத் தொண்டு நிறுவனங்கள் முற்றாக மூடப்பட்டிருந்ததுடன், வாகனப் போக்குவரத்துக்களும் செயலிழந்து காணப்பட்டன.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரிக்கு முன்பாக ஆரம்பமான பேரணி பிரதான வீதியினூடாகச் சென்று மீண்டும் அல்மனார் முன்றலை வந்தடைந்தது. நற்பிட்டிமுனை பிரதான வீதியில் ஆரம்பமான பேரணி சந்தை ஊடாகச் சென்று முச்சந்தியை அடைந்தது. பிரதான போக்குவரத்துப் பாதைகளில் டயர் எரிக்கப்பட்டு, கட்டைகளும் போடப்பட்டன. கல்முனை, சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் முனற்ல்களிலிருந்து ஆரம்பமான பேரணிகள் மாளிகைக் காட்டினூடாகவும் சென்றது. இப்பேரணிகளில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

சம்மாந்துறை தைக்காப் பள்ளியிலிருந்து ஆரம்பமான மாபெரும் பேரணி விளினியடி முச்சந்தி வரை சென்றது. ஒபாமாவின் கொடும்பாவி எரித்து, அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிரான எதிர்ப்புக் கோஷங்களும் எழுப்பப்பட்டன.

## முல்லைத்தீவில் ...(தொடர்)

பிரதிநிதிகள் முல்லைத்தீவுக்குச் சென்று அரசாங்க அதிபர் வேதநாயகத்தை மாவட்ட செயலகத்தில் சந்தித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் மீள்குடியேற்றம் அபிவிருத்தி உட்கட்டுமான நிர்மாணப் பணிகள் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் குறித்து இவர்களுக்கு அரசாங்க அதிபர் விளக்கமளித்தார்.

இதன் பின்னர் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பகுதிகளுக்கும் ஐ.நா. பிரதிநிதிகள் நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் வேதநாயகன் தெரிவித்தார்.

## யாழ்.பொதுசன...(தொடர்)

மிச்சல் ஜே.சிசன் இரண்டு நாள் விஜயமாக வடக்கிற்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்தார்.

யாழ்ப்பாண பொது நூலகத்திற்கு நேற்று விஜயம் செய்த அமெரிக்கத் தூதுவரை யாழ். மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா வரவேற்றார். யாழ். நூலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்று கையிலேயே அமெரிக்கத் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார். தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு அமெரிக்கா என்றும் உதவியதாகவும், உறுதுணையாகவும் இருக்குமென்றும் கூறினார்.

யாழ்.மாநகர மேயர், பிரதம நூலகர் மற்றும் நூலக ஊழியர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1981 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி யாழ்.பொதுசன நூலகம் எரியூட்டப்பட்டது யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கு முன்னோடியாக தென்னிலங்கையிலிருந்து தேர்தல் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டவர்களோ இதற்குத் தீ மூட்டினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்மை குறிப்பிடத்தக்கது.

## அழுத்தம்... (தொடர்)

யாழ்.மாவட்ட மக்களுக்கு அதிகளவிலான தேவைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவான விதத்தில் பெற்றுக்கொடுக்க வேண்டும். சிறிய அளவிலான உதவிகளைச் செய்ய நாம் தயார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவர், யாழ். ஆயர் இல்லத்தில் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, அரசியல் தீர்வை நோக்கி நகர அரசாங்கத்திற்கு கூடிய அழுத்தங்கள் கொடுக்குமாறும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த வலியுறுத்துமாறும்அமெரிக்க தூதரிடம் யாழ். ஆயர் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு பதிலளித்த மிச்செல் ஜே.சிசன், இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு அரசாங்கததிற்கு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அழுத்தங்களைக் கொடுத்து வருவதாகவும் அதற்கான தீர்வுகள் இன்னமும் எட்டப்படவில்லை என்றும் கூறினார்.

## பிரிட்டனில் ...(தொடர்)

காலம் முடிவடைந்தும் அதனை புதுபிக்க அந்நாட்டு அரசாங்கம் மறுத்தமை காரணமாகவே நாட்டிற்கு திருப்பியனுப்பப்படுவதாகவும் அவ்வதிகாரி கூறினார்.

## வைகோவும்....(தொடர்)

விஜயத்துக்கு தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இருப்பினும் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை ரத்து செய்ய முடியாது என இந்திய மத்திய மத்திய அரசும், மத்திய பிரதேச மாநில அரசும் அறிவித்துள்ளது. இதனையடுத்தே ஜனாதிபதிக்கு கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தார் வைகோ. மேலும் தனது தலைமையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்களுடன் ஏராளமான பஸ்களில் சாஞ்சிக்கு பயணித் தார்.

வைகோ உள்ளிட்டோர் மத்தியப் பிரதேச மாநில எல்லையை நேற்று அடைந்தனர். அங்கு மகாராஷ்டிரா - மத்தியரப் பிரதேச எல்லையில் உள்ள சிந்த்வாரா மாவட்டத்தில் உள்ள பந்துர்னா என்ற ஊரை அவர்கள் அடைந்த போது பொலிஸார் அனைவரையும் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

## பட்டதாரிகளுக்கு மட்டுமே!

# அரபு இராச்சிய சுற்றுலா வீஸா

பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர்கள் மட்டுமே சுற்றுலா வீசா மூலம் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கு வர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட தென் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்த புதிய சட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது.

தொழில் மோசடிகளில் ஈடுபடுவதனைத் தடுக்கும் நோக்கில் சுற்றுலா வீசா தொடர்பான சட்டங்கள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

தென்னாசிய நாடுகளைச் சேர்ந்த பலர் சுற்றுலா வீசாக்களின் மூலம் ஐக்கிய அரபு இராஜ்ஜிய நாடுகளுக்கு சென்று அங்கு தொழில்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சுற்றுலா வீசா மூலம் சென்று தொழில் புரியும் இலங்கையர் உள்ளிட்ட தென் ஆசியர்கள் பல்வேறு திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இரஜ்ஜியத்தில் மில்லியன் கணக்கான வெளி



நாட்டு தொழிலாளர்கள் கடயை மாற்றி வருகின்றனர்.

இவர்களில் அதிகமானவர்கள் தென் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் தேர்தலை நடத்த வேண்டும்

## ஐ.தே.க.கோரிக்கை

வடமாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறு அரசாங்கத்தை ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது. வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக பல்வேறு சர்வதேச நிகழ்வுகளில் வழங்கிய வாக்குறுதிகளை ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல பட்டியலிட்டார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் உரையாற்றுகையில், அப்பகுதி மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு இத்தேர்தல் மிக அவசியம் எனக் கூறினார். வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

எனினும், மாகாண சபைகள்,



உள்ளூராட்சி விவகார அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா உரையாற்றுகையில், வடக்கில் நிலைமை இன்னும் போதியளவு முன்னேற்றம் ஏற்படவில்லை என்றார்.

வடக்கின் சில பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை இன்னும் தொடர்வதாகவும் வடக்கில் அவசரமாக தேர்தலை நடத்துமாறு ஐ.தே.கவினர் ஏன் கோருகிறார்கள் என தனக்குப் புரியவில்லை எனவும் அவர் கூறினார்.

# பின்லாந்து பெண் துஷ்பிரயோகம்: ஒருவர் கைது

பின்லாந்து நாட்டுப் பெண் பிரஜை ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹிக்கடுவ, கோணாபின்வல பிரதேசத்தில் உள்ள அவரது சொந்த வீட்டில் வைத்து குறித்த பெண் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளர்.

தன்னிடமிருந்த 400 யூரோ பணமும் சந்தேக நபரினால் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பின்லாந்து பிரஜை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுற்றுலா உட்பட பல்வேறு காரணங்களுக்காகவும் நாட்டுக்கு வரும் பெண்களின் பாதுகாப்பு குறித்து பொலிஸார் [illegible]சியமான நடவடிக்கைகளை [illegible]டுத்துள்ள போதும் ஆங்காங்கே இவ்வாறான துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது பொலிஸார் தீவிர சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகிறது.

# இந்தியாவிலிருந்து 22 குடும்பங்கள் தாய் நாட்டுக்குத் திரும்பின



இந்தியாவில் தஞ்சம் கோரியிருந்த 22 குடும்பங்கள் நேற்றுமுன்தினம் இரவு இலங்கை திரும்பியுள்ளன. நீண்ட காலத்திற்கு முன்னர் இலங்கையில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் இவர்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்திருந்தனர். நாட்டில் தற்சமயம் சகஜ நிலை தென்படுவதால் இவர்கள் நாடு திரும்பியிருக்கிறார்கள்.

22 குடும்பங்களைச் சேர்ந்த 73 பேர் இவ்வாறு நாடு திரும்பியிருக்கிறார்கள். இவர்களில் 41 ஆண்களும் 32 பெண்களும் அடங்குவர். அந்த 73 பேரில் 32 சிறுவர்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இடம்பெயர்ந்து தமிழக அகதி முகாம்களில் வசித்து வந்த தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இலங்கை அரசும், அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகரகமும் உடனடி நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# லண்டனுக்குச் செல்வதனால் பிரச்சினைக்கு தீர்வு கிட்டாது

## அமைச்சர் நிமல்

லண்டனுக்கு விஜயங்களை மேற்கொள்வதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்பட்டு விடாது. மாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடனும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனுமே பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும். அதற்காக அழைப்பு விடுக்கின்றோம் என சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடமாகாண தேர்தல் தொடர்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியினால் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இங்கு மேலும் கூறுகையில், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. அதில் அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளது.

இங்கு தேர்தல் மிகவும் சுயாதீனமாக இடம்பெற்றுள்ளது. அதனாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களை பெற்றிருக்கின்றது. இந்நிலையில் சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பில் பேசுவது அர்த்தமற்றது. சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாமலேயே தேர்தல் நன்றாக நடந்துள்ளது. அரசாங்கத்தை பொறுத்தவரையில் நாம் சர்வதேசத்தின் கருத்துக்களுக்கும் அதன் தேவைகளுக்கும் அல்லது சட்டங்களுக்கும் உட்பட்டு செயற்பட வேண்டிய தேவையில்லை. அத்துடன் எந்தவொரு அழுத்தத்துக்கும் நாம் பணியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை அது எதனைப் பெற வேண்டுமானாலும் அரசாங்கத்திடம் வாருங்கள் என்று கூறுகின்றோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் எதனையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

## இன்றைய இராசி பலன் (20.09.2012)

**நந்தன வருடம் புரட்டாதித் திங்கள் 4ஆம் நாள் வியாழக்கிழமை**

நட்சத்திரம் : விசாகம் இரவு 9.55 வரை அதன் பின் அனுசம்
திதி : பஞ்சமி இரவு 10.28 வரை. அதன் பின் சஷ்டி
சுபநேரம் : 7.32 - 9.02
இராகுகாலம் : 1.32 - 3.02
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : பதவி உயர்வு, மன ஆறுதல், நண்பர்கள் உதவி
**இடபம்** : வீண் யோசனை, தேகசுகக் குறைவு, கடன் பயம்
**மிதுனம்** : காரிய அனுகூலம், பொருட்சேர்க்கை, புத்திரரால் மகிழ்ச்சி
**கடகம்** : அதிக மனச்சுமை, யோசனை மிகுதி, குடும்பக் கலகம்
**சிங்கம்** : முயற்சி பலிதம், பிறர்க்கு உதவுதல், சகோதர உதவி
**கன்னி** : பொருள் வரவு, போசன சுகம், வாக்கினால் இலாபம்
**துலாம்** : அமைதியின்மை, மன விரக்தி, பயனற்ற செய்கை
**விருச்சிகம்** : வீண் செலவு, பிரயாணக் கஷ்டம், தூக்கமின்மை
**தனுசு** : எதிர்பாராத வரவு, மனமகிழ்ச்சி, பெரியோர் நட்பு
**மகரம்** : தொழில் விருத்தி, இடமாற்றம், குறைகேட்டல்
**கும்பம்** : பணவரவு, பூமி இலாபம், தந்தை வழி உதவி
**மீனம்** : தொழில் கஷ்டம், வீண் முயற்சி, கோப மிகுதி

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# உஸ்பெஸ்கிஸ்தானில் நடந்தது ஓர் உரிமைப் போர்

## இரண்டு வருடங்களில் 2000 முஸ்லிம் பெண்கள் பலி

புரட்சிகர பெண் விடுதலை எல்லாம் ஐரோப்பாவில் மட்டுமே சாத்தியமாகும். ஆசிய கண்டத்தை சேர்ந்த, அதிலும் முஸ்லிம் நாடுகளை சேர்ந்த பெண்கள் எழுச்சியுற மாட்டார்கள். அவர்கள் பழமை-வாதத்தில் ஊறியவர்கள் என்று பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில், சோவியத் ஒன்றியத்தின் பகுதியாகவிருந்த உஸ்பெகிஸ்தானில் நடந்த பெண் உரிமைப்போர் பற்றி எத்தனை பேர் கேள்விப் பட்டிருக்கிறார்கள்? இதுவரை உலகில் எந்தப் பகுதியிலும், பெருந் தொகையான பெண்கள் தமது உயிரைக் கொடுத்து போராடிய வரலாறு, உலகில் வேறெங்கும் நடக்கவில்லை. 1927க்கும் 1929க்கும் இடைப் பட்ட இரண்டு வருடங்களில் மட்டும், சுமார் இரண்டாயிரம் பெண்கள், இந்த உரிமைப் போரில் கொல்லப்பட்டார்கள்!

இரத்தம் சிந்திய பெண் விடுதலைப் போரில், முதல் களப்பலியான நூர்ஜான், அவரது சகோதரர்களால் கழுத்து வெட்டிக் கொலை செய்யப் பட்டார்! "பெண்களே! உங்களைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்கை உடைத் தெறியுங்கள்." என்று புதுமைப் பெண்ணைப் பற்றி கவிதை பாடிய உஸ்பெக்கிய கவிஞர் ஹம்சா, நமது பாரதியாரை நினைவுபடுத்துகின்றார். கல்வி மறுக்கப்பட்ட மகளிரை கவிதை பாடி தட்டி எழுப்பிய புரட்சிக் கவிஞன், மத வெறியர்களால் அடித்துக் கொல்லப்பட்டான். சோஷலிச உஸ்பெகிஸ்தானில், ஹம்சாவுக்கும், நூர்ஜானுக்கும் சிலைகள் கட்டப்பட்டன. இத்தனைக்கும், அந்த இரண்டு தியாகிகளும் கம்யூனிஸ்டுகள் அல்ல!

உஸ்பெகிஸ்தான் பெண்களின் உரிமைப் போர் பற்றி அறிந்து கொள்வதற்கு முன்னர், அன்றைய மத்திய ஆசியாவின் சமூக அமைப்பு எப்படி இருந்தது என்று பார்ப்போம். இன்றைக்கு இருக்கும் தேசிய எல்லைகள் எல்லாம் பிற்காலத்தில் உருவானவை. அன்றைய மத்திய ஆசிய நாடுகள், ஆப்கானிஸ்தானுடன் இணைந்து, இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாக இருந்தது. அந்தக் காலத்தில் தருக்கிஸ்தான் என்று அழைக்கப்பட்ட பகுதிக்கு பொறுப்பாக ஒரு எமிர் இருந்தார்.

உண்மையில் அது ஒரு பிராந்திய கவர்னர் பதவி போன்றது என்றாலும், எமிர் ஒரு அரசனைப் போல ஆண்டு வந்தார். எமிரும், மத குருமாரான முல்லாக்களும், "பெண்கள் ஆண் துணையின்றி, தனியாக வெளியே செல்வதையும், கல்வி கற்பதையும்," தடை செய்து வைத்திருந்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியாவை நோக்கி விரிந்து கொண்டிருந்த ரஷ்ய சாம்ராஜ்யம், துருக்கெஸ்தான் பகுதியையும் போரில் வென்று ஆக்கிரமித்தது. தெற்கே இன்னொரு உலக வல்லரசான பிரித்தானியா, என்ன விலை கொடுத்தென்றாலும், ரஷ்யாவின் முன்னேற்றத்தை தடுக்க விரும்பியது. அதனால், ஆப்கானிஸ்தானை இரண்டு வல்லரசுகளுக்கு இடைப்பட்ட நடுநிலைப் பிரதேசமாக, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் போட்டுக் கொண்டனர். இல்லாவிட்டால், இன்று இந்தியாவும் ரஷ்யாவின் ஒரு மாநிலமாக இருந்திருக்கும்!



ரஷ்யப் பேரரசன் ஜார் மன்னன், துருக்கெஸ்தான் பகுதியை ரஷ்யாவுடன் இணைத்துக் கொண்டாலும், எமிரையும் தன் கைக்குள் போட்டுக் கொண்டான். பிரிட்டிஷ் காலனியான இந்தியாவில், மகாராஜாக்கள் ஆட்சி செய்தது போல, எமிரின் உள்நாட்டு ஆட்சியதிகாரத்தில் ரஷ்யர்கள் தலையிடவில்லை. வெளிநாட்டுத் தொடர்பு, தேசிய இராணுவம் போன்ற முக்கிய விடயங்களை ரஷ்யர்கள் பார்த்துக் கொண்டனர். துருக்கெஸ்தான் பகுதிகளில் ரஷ்ய இராணுவ முகாம்கள் இருந்தன. நிர்வாகக் கட்டமைப்புக்காகவும் பெருமளவு ரஷ்யர்கள் குடியேற்றப் பட்டனர். இருந்தாலும், ரஷ்ய சட்டம் அவர்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். மண்ணின் மைந்தர்களான முஸ்லிம் மக்கள், ரஷ்ய சட்டத்தினால் ஆளப்பட்டனர். இதனால், சார் மன்னனின் ரஷ்ய சாம்ராஜ்யத்திற்குள் வாழ்ந்தாலும், பெண்களுக்கு கல்வி கற்கும் உரிமை கிடைக்கவில்லை. அதே போன்று, துருக்கெஸ்தான் முஸ்லிம்களுக்கு ரஷ்ய பிரஜாவுரிமையும் வழங்கப்படவில்லை. அவர்கள் வழக்கம் போல, எமிரின் குடிமக்களாக நடத்தப் பட்டனர்.

துருக்கெஸ்தான் முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர், துருக்கி மொழி-களைப் பேசுகின்றனர். (காசக், உஸ்பெக், கிரிகிஸ் போன்ற மொழிகள் ஒன்றுக்கொன்று சிறிதளவு மாறுபடும் ஒரே மாதிர-ியான மொழிகள்.) தாஜிக் மக்கள் மட்டும், ஈரானிய பார்சி மொழியை ஒத்த வேற்று மொழி பேசுகின்றனர். டாடார்ஸ்தான் என்ற இன்னொரு துருக்கி மொழி பேசும் மக்களின் நாடு, பல நூற்றாண்டுகளாக ரஷ்யாவின் ஒரு பகுதியாக இருந்தது. இதனால், டாட்டார் மக்கள், ரஷ்ய நிர்வாகிகளாக வேலை வாய்ப்புப் பெற்று வந்தனர். டாட்டார் மக்களுக்கும், துருக்கெஸ்தான் மக்களுக்கும் இடையில், ஒரே மொழி காரணமாக நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டன. உண்மையில், ரஷ்ய அரசின் நோக்கமும் அதுவாக இருந்தது.

19 ம் நூற்றாண்டில், ஆங்கிலேயர்கள் தாம் பிடித்த காலனிகளில் எவ்வாறு நடந்து கொண்டனரோ, அவ்வாறு தான் ரஷ்யர்களும் நடந்து கொண்டனர். காலனிய மக்களை நாகரீகப் படுத்துவது தமது கடமை என்று ஆங்கிலேயர்கள் நினைத்ததைப் போன்று, "பின்தங்கிய மத்திய ஆசிய மக்களை நாகரீகமயமாக்கும் பொறுப்பை" ரஷ்யர்கள் ஏற்றுக் கொண்டனர். காலனிப்படுத்திய பகுதிகளில், ரஷ்ய வழிக் கல்வி அளித்து, புதிய மத்தியதர வர்க்கம் ஒன்றை உருவாக்கி இருந்தனர். ஆங்கில மொழி பேசத் தெரிந்த இந்தியர்களைப் போல, ரஷ்ய மொழி பேசத் தெரிந்த துருக்கியர்களும் ரஷ்யர்களைப் போல சிந்திக்கத் தொடங்கினார்கள். அப்போது தான் மேலைத்தேய தத்துவங்களும், துருக்கெஸ்தான் பிராந்தியத்தில் பரவத் தொடங்கின.

அமைதிப் பூங்காவாக காட்சியளித்த துருக்கெஸ்தானில், 1916 ம் ஆண்டு பெரும் கலவரம் உண்டானது. அப்போது முதலாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. தோல்வியுற்றுக் கொண்டிருந்த ரஷ்யப் படைகளுக்கு மேலதிக துருப்புகளை சேர்ப்பதற்காக, கட்டாய ஆட்சேர்ப்பு நடத்தப் பட்டது. பதினாறுக்கும் நாற்பது வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள், கட்டாயமாக ரஷ்ய இராணுவத்தில் சேர வேண்டும் என உத்தரவ-டப்பட்டது.

> பெண்களின் உரிமைகள் மற்றும் அவர்களது பாதுகாப்புக்காக அகிம்சை முறையில் போராடிய ஏமன் நாட்டை சேர்ந்த டவாக்குல் கர்மன், லைபேரிய அதிபர் எல்லன் ஜோன்சன் சர்லீப், லைபேரிய சமூக ஆர்வலர் லேமா கிபோவீ ஆகிய 3 பெண்களுக்கு 2011ஆம் ஆண்டில், அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

கட்டாய ஆட்சேர்ப்பை எதிர்த்து, துருக்கெஸ்தான் பகுதி நகரங்களில் கலவரங்கள் வெடித்தன. இதிலே குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், கலகத்தில் பெண்கள் அதிக-ளவில் பங்கு பற்றினார்கள். துருக்கெஸ்தான் வரலாற்றில், பெண்கள் பொது இடத்தில் ஒன்று கூடுவதும், அரசியல் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதும் அதுவே முதல் தடவை.

பெண்கள், ரஷ்ய அரச அலுவலகக் கட்டிடங்களை தாக்கி உடைத்தார்கள். இந்தக் கலவரம் சில வாரங்கள் நீடித்தது. இன்றைய நவீன காலத்தில், கைத் தொலை பேசி, இணையத்தை பாவித்து போராட்டத்திற்கு ஆட்களை சேர்க்கிறார்கள். அந்தக் காலத்தில், அப்போது தான் அறிமுகமான, தந்தி, தட்டச்சு இயந்திரங்கள் போராட்டத்தை ஒழுங்கு படுத்த உதவின. மேலும் மசூதிகளில் முல்லாக்களும் போராட்டத் திற்கு செல்லுமாறு அறைகூவல் விடுத்தனர். அந்நியர்களான ரஷ்யர்களுக்கு எதிராக பெண்களை போராட அழைத்த முல்லாக்கள், ஒரு பெரிய வரலாற்றுத் தவறிழைத் தார்கள். பத்து வருடங்களுக்குப் பின்னர், இதே பெண்கள், முல்லாக்களின் அதிகாரத்தை எதிர்த்தும் போராடப் போகிறார்கள் என்று, அன்றைக்கு யாரும் நினைத் திருக்க மாட்டார்கள்.

1917ஆம் ஆண்டு, போல்ஷெவிக் கட்சியினரின் சோஷலிசப் புரட்சி வென்றது. துருக்கெஸ்தானில் வாழ்ந்த ரஷ்யர்களுடன், துருக்கியருக்கும் சம உரிமைகள் வழங்கப் பட்டு, புதிய சோவியத் ஒன்றியத்தின் பிரஜைகள் ஆக்கப்பட்டனர். பழமைவாதிக-ளின் எதிர்ப்பை மீறி, பெண்களுக்கும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வழங்கினார்கள். அந்த கால கட்டத்தில், மேற்கு ஐரோப் பாவிலும், அமெரிக் காவிலும் வாழ்ந்த பெண்கள், வாக்குரிமை பற்றி நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அன்றைய ஐரோப்பாவில், குறைந்தது ஐந்து சதவீதப் பெண்கள் தான் வெளியே வேலைக்கு சென்று வந்தனர். ஆனால், சோவியத் யூனியனில், உழைக்க முடிந்த பெண்கள் அனைவருக்கும் வேலை கிடைத்தது. வேலை செய்வது தனி மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட்டதால், துருக்கெஸ்தான் பெண்களையும் வேலைக்கு அனுப்பினார்கள். ஆனால், அப்பொழுது ஒரு பிரச்சினை எழுந்தது.

(நாளை தொடரும்...)

# கச்சதீவை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்



## ஜெயலலிதா மீண்டும் வழக்குத் தாக்கல்

1974ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்ட கச்சத்தீவை மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டும் எனக் கோரி தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் உச்ச நீதிமன்றத்தில் புதிய மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

கச்சத்தீவு விவகாரம் குறித்து தான் பிரதமருக்கு எழுதிய கடிதங்களையும் அந்த மனுவில் இணைத்துள்ள ஜெயலலிதா, இந்த வழக்கை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்படியும் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் கூறியிருப்பதாவது,

1974ஆம் ஆண்டு மு.கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சிக்காலத்தில் கச்சத்தீவினை இலங்கைக்கு இந்தியா கொடுத்ததன் காரணமாக, இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த தமிழக மீனவர்களின் தொழில் பாதிக்கப் படுகின்றனர்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாணும் வகையில், மேற்கு வங்க மாநிலம் பெருபாரி வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை சுட்டிக்காட்டி, கச்சத்தீவினை இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஒப்பந்தங்கள் சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல என 2008ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் வழக்கு தொடர்ந்தேன்.

மேலும், கடந்த 2011ஆம் ஆண்டு நான் ஆட்சி பொறுப்பினை ஏற்றவுடன் கச்சத்தீவு குறித்த அனைத்து ஆவணங்களையும் தன்வசம் வைத்துள்ள தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை, தன்னை ஒரு வாதியாக சேர்த்துக்கொள்ளும்படி உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய வேண்டும் என்று, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் தீர்மானம் இயற்றப்பட்டது. இந்த தீர்மானத்தினையடுத்து, தமிழ்நாடு அரசின் வருவாய்த்துறையும் மேற்படி வழக்கில் தன்னை ஒரு வாதியாக இணைத்துக் கொண்டது.

இந்திய நாட்டுக்கு சொந்தமான ஒரு பகுதியை, அந்நிய நாட்டிற்கு கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை நாடாளுமன்றத்தில் இரு அவைகளின் ஒப்புதலோடு, இந்திய அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தின் மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என 1960ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் பெருபாரி வழக்கில் தீர்ப்பளித்து உள்ளது.

இந்த தீர்ப்பிற்கு முற்றிலும் முரணான வகையில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் இல்லாமல், கச்சத்தீவை தாரை வார்க்கும் ஒப்பந்தம் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டது செல்லத்தக்கதல்ல.

கச்சத்தீவு இராமநாதபுரம் மாவட்டத்துக்குச் சொந்தமானது. தமிழக மீனவர்கள் கச்சத்தீவு வரை சென்று மீன் பிடிக்கவும், மீன் வலைகளை கச்சத்தீவில் உலர்த்தவும் உரிமை உண்டு. ஆகவே, தமிழகத்துக்குச் சொந்தமான கச்சத்தீவை மீண்டும் எங்களிடமே ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட வேண்டும். அதற்கு உதவும் வகையில் கச்சத்தீவு வழக்கை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மனுவுடன், கச்சத்தீவு தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக அரசு சார்பாக எழுதப்பட்ட 11இற்கும் மேற்பட்ட கடிதங்களையும் ஆவணமாக எடுத்துக் கொள்ளும்படியும் இணைத்து உள்ளேன் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யானை தாக்கியதில் இளைஞன் பலி

அக்கரைப்பற்று கண்ணகிபுரம் பாமாங்கை வயல் பிரதேசத்தில் யானை தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று கண்ணகி வீதியைச் சேர்ந்த 27 வயதுடைய யோகராசா உதயராஜ் என்பவரே யானை தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பின் உறவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் கடந்த 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் சார்பாக ஆலையடிவேம்பு பிரதேச சபை தேர்தலில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நோர்வே சிறுவர் காப்பகத்துக்கு எதிராக இலங்கையில் முறைப்பாடு

நோர்வே அரசாங்கத்தின் கீழ் இயங்கிவரும் சிறுவர் காப்பகத்தில் இருந்து தமது பிள்ளைகளை மீட்டுத்தருமாறு வலியுறுத்தி நோர்வேயில் உள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று குடும்பத்தினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

முறைப்பாட்டளர்களான தாமோதரம்பிள்ளை ஆனந்தராசா- ரஜித்தா ஆனந்தராசா, எரிக் ஜோசப்-பிலாந்திணி ஜோசப் மற்றும் மகாத்மா ஜோதி செல்லத்துரை - சித்திராதேவி செல்லத்துரை ஆகியோரின் கையொப்பமிட்ட ஆவணங்களுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜேசு அமிர்நாதன் மற்றும் டோப்பையா பங்கிரேசர்ஸ் ஆகியோருடாகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நோர்வேயில் வசித்து வரும் தாமோதரம்பிள்ளை ஆனந்தராசா-ரஜித்தா ஆனந்தராசா ஆகியோரின் மூன்று குழந்தைகளும் மற்றும் மகாத்மாஜோதி செல்லத்துரை - சித்திரதேவி செல்லத்துரை ஆகியோரின் மூன்று பிள்ளைகளும் என மொத்தம் 10 சிறுவர், சிறுமியர்கள் இவ்வாறு நோர்வே சிறுவர்காப்பகத்தின் மூலம் பலவந்தமாக கூட்டிச்செல்லப்பட்டிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இலங்கைத் தமிழ் அகதி செந்தூரன் தமிழகத்தில் மீண்டும் உண்ணாவிரதம்

சிறப்பு முகாமில் உண்ணாவிரதம் இருந்து தற்கொலை முயற்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட செந்தூரன், நேற்றுமுன்தினம் பிணையில் வெளி வந்ததைத் தொடர்ந்து மீண்டும் முகாமில் அடைக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து அவர் உண்ணாவிரதப் போராட்டத்தையும் மீண்டும் துவக்கியுள்ளார். முறையான ஆவணங்கள் இல்லாமல் கடல் வழியாக தமிழகத்திற்குள் வந்த இலங்கை அகதிகள் செங்கல்பட்டு முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு மோதல் ஏற்பட்டதைத் தொடர்ந்து, செந்தூரன் உட்பட எட்டு பேர் பூந்தமல்லியில் உள்ள, இலங்கை அகதிகள் சிறப்பு முகாமிற்கு மாற்றப்பட்டனர்.

தன் மீதுள்ள வழக்கை விரைந்து விசாரிக்க வேண்டும், தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி செந்தூரன் கடந்த மாதம் உண்ணாவிரதப் போராட்டம் துவக்கினார்.

அதிகாரிகள் பலகட்ட பேச்சு வார்த்தை நடத்தியும், அவர் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். உடல்நிலை மோசமானதை தொடர்ந்து, செந்தூரன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வந்த செந்தூரனை, கடந்த மாதம், 31ஆம் திகதி பொலிசார், தற்கொலை முயற்சி வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இவர் நேற்றுப் பிணையில் வெளிவந்தார். வெளிவந்த செந்தூரனை பொலிசார் பூந்தமல்லி சிறப்பு முகாமில் அடைத்தனர். இதனையடுத்து அவர் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தையும் செந்தூரன் ஆரம்பித்துள்ளார்.

# மரக்கடத்தல் அம்பலம்

மன்னார், மடு காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மரங்களை வெட்டி விற்பனை செய்வது குறித்து தெரியவந்துள்ளது.

செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் மூலமாக இந்நடவடிக்கை தெரியவந்துள்ளது.

இதன்போது விற்பனைக்கு எடுத்துச் செல்ல தயாரான நிலையில் வெட்டப்பட்டிருந்த மரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

எனினும் பொலிஸார் வருவதை அறிந்து கொண்ட, சட்டவிரோத மர விற்பனையாளர்கள் அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

# கல்முனை நகரில் ஆர்ப்பாட்டம்

இறைதூதர் முஹம்மது நபியையும் (ஸல்) இஸ்லாத்தையும் உலக முஸ்லிம்களையும் அவமதிக்கும் வகையில் அமெரிக்காவினால் தயாரிக்கப் பட்டுள்ள குறும் திரைப்படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கல்முனை மாநகரிலும், சாய்ந்தமருது பிரதேசத்திலும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் உருவப் பொம்மை மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் செருப்பால் அடித்ததுடன், பின்னர் அந்த உருவப் பொம்மை எரிக்கப்பட்டது.

# கடற்படைத் தளபதி ஓய்வு



இலங்கையின் 17ஆம் கடற்படைத் தளபதி சோமதிலக்க திஸாநாயக்கா ஓய்வு பெற்றுக்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி விமானப்படைத் தளபதி ஓய்வு பெற்றுக்கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி சோமதிலக்க திஸாநாயக்கா இலங்கையின் 17ஆம் கடற்படைத் தளபதியாகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்கா கடந்த 35ஆண்டுகளாக கடற்படையில் சேவையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி கெடட் அதிகாரியாக வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்கா இலங்கையில் கடற்படையில் இணைந்து கொண்டார்.

# சந்தேகநபர் கைது

கம்பஹாவிலுள்ள 'கப்ருக' ஸ்ரோர்ஸ் உரிமையாளரின் கொலை தொடர்பான பிரதான சந்தேக நபர் சீதுவையில் நேற்று புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பல மில்லியன்களுக்குச் சொந்த ஸ்ரீமான இவ்வர்த்தகர் இரு இனந்தெரியாத நபர்களினால் ஜூலை மாதம் 13ஆம் திகதி அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி வியாழக்கிழமை

## கிழக்குக்கொரு முஸ்லிம் முதலமைச்சர்; நல்லதொரு முன்னோடி நடவடிக்கை

இலங்கையின் முதலாவது முஸ்லிம் முதலமைச்சராக நஜீப் ஏ மஜீத் நேற்று முன்தினம் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். கடந்த எட்டாம் திகதி வட மத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாணங்களது தேர்தல்கள் நடந்து முடிந்தன. இந்த மூன்று மாகாணசபைத் தேர்தல்களிலும் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் அநேகரின் கவனத்தை அதிகளவில் ஈர்த்தது.அதுமட்டுமல்ல தேர்தல் முடிவுகளின் பின்னர் யார் ஆட்சி அமைப்பது என்று முடிவு செய்வதில் கிட்டத்தட்ட பத்து நாட்களுக்கு மேலாக ஓர் இழுபறி நிலையிலேயே இருந்து வந்திருக்கிறது.

மாகாணசபை முறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டு கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு கடந்து விட்டது. இலங்கையிலுள்ள சகல மாகாண சபைகளிலும் ஒப்பீட்டளவில் மூவின மக்களும் அதிகளவில் வாழும் மாகாணம் கிழக்குத்தான். இங்கு 40.39 சதவீத தமிழ் மக்களும் 37.64 சதவீத முஸ்லிம் மக்களும், 21.64 சதவீத சிங்கள மக்களும் வாழ்கிறார்கள். தேர்தல் முடிந்த பின்னர் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் மக்களின் சார்பில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து, ஐ.தே.கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து கிழக்கின் நிர்வாகத்தை கைப்பற்றக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேச்சுகள் அடிபட்டன. அதிகப்படியான ஆசனங்களைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரசும் இணைந்து நிர்வாக அதிகாரத்தைப் பெறுமென்றும் ஊகங்கள் வெளியாகின.

தமிழ், முஸ்லிம், சிங்கள கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒரு தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கும் கூட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கிட்டத்தட்ட பத்து நாட்களாக நிலவிய இழுபறிநிலை முடிவுக்கு வந்தது வரவேற்கக்கூடியது.

அதிகாரப் பகிர்வின் அல்லது அதிகாரப் பரவலாக்கலின் ஓர் அங்கமாகவே மாகாண சபைகள் பார்க்கப்படுகின்றன. 2008ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் அரசாங்கத்தின் அனுசரணையோடு தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டார்கள். யுத்தகாலத்தில் இருந்ததைவிட கடந்த மாகாணசபை ஆட்சிக் காலத்தில் பல ஆக்கபூர்வமான செயற திட்டங்கள் கிழக்கில் நிறைவேற்றப்பட்டதை யாரும் மறுக்க முடியாது. மத்தியிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஓர் அங்கமான முஸ்லிம் காங்கிரஸ், மாகாணத்திலும் ஒரு பங்காளிக் கட்சியாகவே விளங்கப் போகிறது. எனவே சர்ச்சைகளோ, முரண்பாடுகளோ இன்றி நிர்வாகத்தினை கொண்டு செல்லக்கூடிய வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன. எனவே யுத்தம் ஏற்படுத்திய விழுப்புண்களை மாற்றக்கூடிய கூடுதலான வாய்ப்புகள் இப்போது உண்டு.

இலங்கையிலேயே முதலாவது முஸ்லிம் முதலமைச்சர், மூவின மக்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில் பொறுப்பேற்றிருப்பது வரவேற்கப்படக்கூடியது. கூடுதலாக தமிழ் மக்களையும், அடுத்தபடியாக முஸ்லிம் மக்களையும், மூன்றாவதாக எண்ணிக்கையில் குறைந்த சிங்கள மக்களையும் கொண்ட மாகாணமே கிழக்கு. இந்தவகையில் இனம் சார்ந்து முதன்மை கொடுக்காமல் முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராகப் பதவி ஏற்றமை பாராட்டுக்குரியது. சுழற்சி முறையில் இந்த முதலமைச்சர் பதவி வழங்கப்பட இருப்பதால் இரண்டரை வருடங்களின் பின்னர் மீண்டும் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஒருவரே முதலமைச்சர் பதவியைக் கையேற்பார்.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னர் பாரியளவில் இன முரண்பாடுகள் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கவில்லை. அனைத்து இன மக்களுக்கும் பிரிட்டிஷ் ஆட்சியாளரே பொது எதிரியாக பார்க்கப்பட்டனர். அதாவது அரசியல் விழிப்புணர்வு பெற்ற மக்களின் நிலைப்பாடாகவே இது இருந்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகளும், சமய மறுமலர்ச்சி இயக்கங்களும் சுதந்திரத்திற்கு முன்னர் இந்த நாட்டு மக்களை ஒரே குடையின் கீழ் ஒன்றிணைத்து வைத்தன. கொழும்பில் உருத்திரா, சரவணமுத்து போன்ற தமிழர்கள் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். சேர்.பொன்.இராமநாதன் போன்றவர்களை வண்டியில் வைத்து சிங்கள மக்கள் கௌரவமாக இழுத்துச் சொன்றுள்ளார்கள். குருநாகலில் கூட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களாகத் தமிழர்கள் இருந்திருக்கிறார்கள்.

சுதந்திரத்திற்குப் பின்னர்தான் இந்த நாட்டில் இன முரண்பாடுகள் கூர்மையடைந்தன. இனம் சார்ந்த அரசியல் கட்சிகள், வகுப்புவாதக் கோஷங்களோடு அரசியல் அரங்கிற்கு வந்ததால் ஏற்பட்ட பாரதூரமான பிரச்சினையே இதுவாகும். இனமுறுகலால் ஏற்பட்ட யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது. யுத்தமும், இனப் பிரச்சினையும் கற்றுத்தந்த எதிர்மறைப் பாடங்களிலிருந்து இன சௌஜன்யத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் தமிழையே தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம் சகோதரர் முதலமைச்சராக பொறுப்பேற்பது நல்ல சகுனமாகும். தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்கும், இனங்களுக்கிடையே சௌஜன்யத்தை ஏற்படுத்துவதற்கும் தன்னால் ஆன அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன் என்று முதலமைச்சர் தெரிவித்திருப்பது வரவேற்புக்குரியது. சொன்னதை அவர் செயலில் காட்ட வேண்டும். அந்த நம்பிக்கை எமக்கும் இருக்கிறது..

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி: 021-2219567/பக்ஸ்: 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# இலங்கை – இந்திய பொருளாதாரத் தொடர்புகளும், இனப் பிரச்சினையும்

1987 முதல் 1990 வரை, இந்தியா, ஸ்ரீலங்காவில் இராணுவத் தலையீடு நடத்திக் கசப்பான அனுபவங்களை பெற்றிருந்தாலும்கூட, அது மிகவும் நெருக்கமான, அரசியல், இராஜதந்திர, மூலோபாய மற்றும் வர்த்தகத் தொடர்புகளை ஸ்ரீலங்காவுடன் கொண்டுள்ளது. ஆர்வமுள்ள சகல பகுதிகளிலும், அதிகரித்துள்ள தொடர்புகள் காரணமாக கடந்த பல வருடங்களாக இது அனைத்தையும் தழுவியதாகவே மாறியிருந்தது. எனவே இந்தியா, ஸ்ரீலங்காவுடன் அவர்களது இருவழி வர்த்தகம் 4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை வளர்ச்சியடைய வழி ஏற்படும் வகையில் முதன்முதலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை கையெழுத்திட்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஸ்ரீலங்காவின் உள்ளக அரசியல் சூழ்நிலை சாதகமாக மாறியதும் தங்களுக்கு இடையே உள்ள வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் உறுதியாக்கும் வண்ணம் இந்தியா பிரேரித்துள்ள விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் (செபா) கைச்சாத்தாக உள்ளது.

2002 சமாதான நடவடிக்கையின்போது, இந்தியா பெரும் வல்லரசு சக்திகளான அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நோர்வே போன்றவற்றை இந்தியாவின் தேசிய பாதுகாப்பின் அடிவயிற்றுப் பாகததுக்குள் சட்ட பூர்வமாக உள்நுழைய அனுமதி வழங்கியது. இதனால் அதற்கு ஒருவகையான சங்கடம் ஏற்பட்டது. எனினும் இந்தியாவில் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பான எல்.ரீ.ரீ.ஈ குறிப்பிட்டுச் சொல்ல முடியாத எண்ணிக்கையில் தொடர்ந்தும் மீதமாய் இருந்ததால், இந்தியா அந்த சமாதான நடவடிக்கையில் கலந்து கொள்ளவில்லை. இந்தியா தமிழ் நாட்டு தலைவர்களை மட்டுமாவது பயன்படுத்தி அப்போது நிலவிய சூழ்நிலையில் யுத்தத்தை தவிர்த்து சமாதானத்தை தேர்வு செய்யும்படி எல்.ரீ.ரீ.ஈ யினை வற்புறுத்தும்படி செய்திருந்தால், சிங்களவருக்கும் மற்றும் தமிழர்களுக்கும் இடையே நிரந்தரமான சமாதானம் ஏற்படுவதற்குரிய ஒரு பொன்னான வாய்ப்பை இழந்திருக்காது.

2002 நிலைப்பாட்டை இந்தியாவின் செல்வாக்கு அரிக்க ஆரம்பித்து அதன் மூலோபாய கோளத்தை மேலும் குறைத்தது. எப்படியாயினும் ஈழப்போரின்போது,இந்தியா சில அவசியமான இராணுவ உபகரணங்கள் மற்றும் பெறுமதியான உளவுத்துறை ரகசியங்கள் என்பனவற்றை ஸ்ரீலங்காவுக்கு வழங்கியதால் ஸ்ரீலங்கா கடற்படையினர் எல்.ரீ.ரீ.ஈயின் தளபாடக் கப்பல்களை கண்டுபிடித்து அழிக்க முடிந்தது. இந்திய கடற்படையின் ரோந்துச் சேவை, தமிழ் நாட்டிலிருந்து எல்.ரீ.ரீ.ஈ யினருக்கு முக்கியமான வழங்கல்கள் கடத்தப்படுவதை மட்டுப்படுத்தின. இரு நாட்டு கடற்படைகளும் எல்.ரீ.ரீ.ஈயினர் கப்பல்களை கடத்திச் செல்வதை தடுக்கும் வகையில் ஒன்றிணைந்து பணியாற்றினார்கள். இந்த நடவடிக்கைகள் யாவும் ஸ்ரீலங்கா தனது செயற்பாட்டில் வெற்றி பெறுவதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கின.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக மனித உரிமைகள் மீறல்கள்,கடத்தல்கள்,கைதாகி உள்ளவர்களை கொலை

> **<u>தமிழ் கிளர்ச்சியின் மீள் எழுச்சி எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா மற்றும் இந்தியா ஆகியவற்றின் சுமூக உறவில் ஒரு விளக்கமற்ற தன்மையை உருவாக்கிவிடும். எனினும் சமீப காலங்களில் பல காரணங்களினால் இது நடப்பதற்கான வாய்ப்புகள் குறைந்துள்ளன.</u>**

செய்வது,மற்றும் குடிமக்கள் மீது குண்டுமாரி பொழிவது போன்ற செயல்களை யுத்தத்துக்கு முன்னும் பின்னும் செய்து வந்ததாக ஸ்ரீலங்காவின் மீது எழுந்த குற்றச்சாட்டுகளை பற்றி ஒரு பகிரங்க நிலைப்பாட்டைக் கொள்ளாமல் இந்தியா அவற்றை புறக்கணித்து வந்தது. தமிழ் நாட்டில் உணர்ச்சி பூர்வமாக சிந்தப்படும் தாக்கங்கள் ஸ்ரீலங்காவுடனான நட்புறவுக்கு குந்தகம் ஏற்பட்டு விடாதவாறு கட்டுப்படுத்தும் வகையில் புதுடில்லி தனது ஒவ்வொரு முயற்சியையும் மேற் கொண்டது.

இந்திய - ஸ்ரீலங்கா உறவுகளில் பெரிய முட்டுக்கட்டையாக இருப்பது, இன நல்லிணக்க விடயமே. ஜனாதிபதி ராஜபக்ஷ இந்திய உயர் மட்டத்தினருக்கு அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தை (மாகாண சபைகளுக்கு அதிகாரத்தை பகிர்ந்தளித்தல்) இன நல்லிணக்க நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, தான் முற்றாக நடைமுறைப்படுத்தப் போவதாக திரும்பத் திரும்ப வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார். யுத்தத்துக்கு முன்னதாக தமிழருக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிக்க வகை செய்யக்கூடியதாக ஒரு சட்ட அமைப்பை உருவாக்குவதற்காக, அனைத்துக் கட்சி கூட்டம் (ஏ.பி.ஆர்.சி.) ஒன்றை ஏற்படுத்தியிருந்தார். எனினும் அதன் பரிந்துரைகள் யாவும் குளிர் பெட்டியில் அடைக்கப்பட்டன. போருக்கு பின்னர் அரசாங்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்தியது, ஒரு டசனுக்கு மேற்பட்ட தடவைகள் பேச்சு நடத்திய பின்னர்,ஜனாதிபதி அந்த விடயத்தின் அரசியல் கருத்தொருமிப்பை காண்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றினை விரும்பியபடியால். அதுவும் கிடப்பில் போடப்பட்டது.

தமிழ் கிளர்ச்சியின் மீள் எழுச்சி எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா மற்றும் இந்தியா ஆகியவற்றின் சுமுக உறவில் ஒரு விளக்கமற்ற தன்மையை உருவாக்கிவிடும். எனினும் சமீப காலங்களில் பல காரணங்களினால் இது நடப்பதற்கான வாய்ப்புகள் குறைந்துள்ளன. பிரபாகரனின் தலைமையில் பல தசாப்தங்களாக இடம்பெற்ற எல்.ரீ.ரீ.ஈ யின் ஆயுதப் போராட்டம், தோற்றுப்போய் விட்டது.வெகுஜனங்களை அணிதிரட்டக்கூடிய தமிழ் தலைவர்கள், எல்.ரீ.ரீ.ஈ நடத்திய சகோதரப் படுகொலை காரணமாக அழிக்கப்பட்டு விட்டார்கள்.யுத்தத்தின் பின் உயிர் வாழும் தலைவர்கள் ஒரு பொது நிகழ்ச்சி திட்டத்தின் வழியாக வெளிப்பட இயலாதவர்கள், அல்லது தமிழர்களின் நன்மைக்காக தங்களின் அரசியல் பலத்தை அதிகப்படுத்த முடியாதவர்கள்.

அதற்கு மேலாக கடந்த மூன்று தசாப்தங்களாக தமிழர்கள் ஸ்ரீலங்காவுக்கு உள்ளும் வெளியிலும் சிதறியுள்ளார்கள், அதனால் அவர்களை ஒன்றிணைப்பது சிரமம். ஒரு சுதந்திரத் தமிழீழம் அவர்கள் மனங்களைவிட்டு வெகுதூரம் சென்று விட்டது,அவர்களின் உடனடி இலட்சியம், கண்ணியமான வாழ்வுக்கு திரும்புவதும் மோதலில் வருடக்கணக்கில் இழந்துவிட்டதை சரி செய்வதுமே.

எல்.ரீ.ரீ.ஈ.க்கு ஆதரவளித்து வரும் தமிழ் புலம் பெயாந்தவர்களில் உள்ள சக்திகள், தமிழீழத்துக்கான போராட்டத்தை உயிரோடு வைத்திருப்பதற்காக கடும் முயற்சி செய்கிறார்கள், ஆனால் ஸ்ரீலங்காவில் அவர்களுக்கு ஒரு பிடியும் கிடையாது. 11,000 மேற்பட்ட முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்கள் ஸ்ரீலங்காவில் உள்ளனர், அதற்கும் மேலாக எல்.ரீ.ரீ.ஈ யின் பயிற்சி பெற்ற சக்திகளோடு மற்றும் இந்தியா உட்பட, தமிழ் புலம் பெயர்ந்தவர்கள் இடையே உள்ள தமிழ் போராளி அமைப்புக்களும் உள்ளன. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட ஸ்ரீலங்காவிலுள்ள த[...] அரசியற் கட்சிகளுக்கு நிதி வழங்கும் ஒரு மூலகம் தமிழ் புலம் பெயாந்தவர்களாவார்கள். அவர்கள் தமிழ்நாட்டு அரசியற் பரப்புரையாளர்களுடனும் தொடர்புகளை கொணடுள்ளார்கள். எனினும் அதிர்ஷ்டவசமாக ஸ்ரீலங்காவுக்கு கிடைத்திருப்பது, உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் தமிழர்கள் வெள்வேறு குழுக்களாக செயற்படுவதோடு, ஒரு கூட்டான மூலோபாயத்தை கண்டுபிடிப்பதற்குகூட, தங்கள் சொந்த மற்றும் அரசியல் நிகழ்ச்சி நிரல்களில் ஈடுபட்டுள்ளார்கள்.

எல்.ரீ.ரீ.ஈயின் முன்னாள் வெளிநாட்டு பிரதிநிதியான கேபி எனப்படும் குமரன் பத்மநாதன் எல்.ரீ.ரீ.ஈயில் இருந்த கடைசி நாட்களில் உருவாக்கிய நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ப்படும் ரி.ஜி.ரி.ஈ எனும் அமைப்புத்தான், ஒருவேளை எல்.ரீ.ரீ.ஈ அனுதாபிகளினால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளிலேயே சிறந்தது எனக்கூறலாம். அதன் நோக்கம் ஒரு சுதந்திரத் தமிழீழத்தை அமைப்பதற்காக வெளிப்படையான ஜனநாயக வழிகளில் போராட்டம் நடத்துவது என்பதுதான். அமெரிக்காவை தளமாக கொண்ட எல்.ரீ.ரீ.ஈ.யின் சட்ட ஆலோசகரான விசுவநாதன் உருத்திரகுமாரன் என்பவரை பிரதமராகக் கொண்டு வழி நடத்தப்படுவது,

(7ஆம் பக்கம் தொடரும்)

# நல்லிணக்கத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்கு

நல்லிணக்கத்தைஏற்படுத்துவதில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்குதொடர்பான 5ஆவது தேசியமாநாடு, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள சர்வதேச உறவுகள் மற்றும் செயல்திட்டகற்கைக்கானலக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இம் மாநாடானது லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இதில் யுத்தத்திற்கு பின்னரான நல்லிணக்கசெயற்பாடுகளில் தகவல் தொடர்பாடல் தொழல்நுட்பத்தின் ஊடாகபங்காற்றியபலநிபுணர்கள், கொள்கை வகுப்பாளர்கள், நெறியாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் கல்விமான்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இங்குபிரதான உரையை நிகழ்த்திய ஜனாதிபதியின் செயலாளர், மக்களுக்கிடையே நிலையான தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் சமாதானம் மற்றும் சமூக வலையமைப்பை சிறந்த முறையில் பேணதகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் முக்கியபங்காற்றி வருவதாகதெரிவித்தார்.

மேலும் அவர் நல்லிணக்கத்தைஏற்படுத்துவதற்கு தொழில்நுட்பத்தினைப்பயன்படுத்தும் ஆறு பிராதானமுறைகள் குறித்தும் விளக்கினார். அவையாவன, தகவல் வழங்குதல் மற்றும் மக்களுக் கிடையேஉறவுகளைப் பலப்படுத்தல், சூழ்நிலைகளை புரிந்து கொள்ளும் திறன்,அதன்படிசெயற்படும் திறன், சூழ்நிலைகளுக்கேற்பதீர்மானங்களை மேற்கொள்ளும் திறன், உறவுகளுக்கிடையேயான ஒத்துழைப்புக்கு உதவுதல் மற்றும் வேறுப்பட்ட கலாச்சாரம் மற்றும் மொழிகள் மத்தியில் மக்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தல் போன்றவை ஆகும்.

இம் மாநாட்டின் மூலம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பல்வகையானபங்குகள் குறித்தும் ஆராயப்பட்டது. இதில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பாடசாலை மட்டத்தில் தகவல் தொடர்பாடல் கல்வியின் தரத்தை உயர்த்தல், வாழ்வாதாரமுன்னேற்றத்திற்கு இத் தொழில்நுட்பத்தின் மூலம் வாய்ப்புக்களை ஏற்படுத்தல் மற்றும் சமூகங்களுக் கிடையேயான புரிந்துணர்வுமற்றும் இணக்கப்பாட்டை ஏற்படுத்த சமூக ஊடகங்களைப் பயன்படுத்தல் போன்றவைதொடர்பாகஆராயப்பட்டது.

வடக்குமற்றும் கிழக்கில் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக ஏற்கனவே பலதிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் வடக்குகிழக்கில் உள்ள அனேகமான பாடசாலைகளுக்கு கணணிகள் வழங்கப்பட்டு தொடர்பாடல் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இதைத் தவிரவாழ்வாதாரமுன்னேற்றத்தை ஏற்படுத்தமேற்கொள்ளப்பட்டநடவடிக்கைகள் மூலம் பலவேலை வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. சமூகவலைப்பின்னலின் முன்னேற்றத் தைவடக்குமற்றும் கிழக்கு மக்கள் அனுபவித்து வருகின்றனர், இதன்மூலம் வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழ் மக்களுடன் சிறந்த தொடர்பாடலை உருவாக்கி அவர்கள் நாட்டின் உண்மைநிலவரம் குறித்து தெளிவைபெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது எனவும் இங்கு கருத்து தெரிவிக்கப் பட்டது.

இதன் செயலமர்வுகள், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பநிறுவனத்தின் பிரதானநிறை வேற்றதிகாரி திரு.ரெஷான் தேவபுர, இலங்கை பாராளுமன்றதகவல் தொழில்நுட்பபணிப்பாளர் திரு. மஹேஷ் பெரேரா மற்றும் யாழ்ப்பாண பல்கலைகழகத்தைச் சேர்ந்த திரு.சார்ல்ஸ் எகுனி ஆகியோரால் நடாத்தப்பட்டது.

# புகலிட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால் மேன்முறையீடு செய்யலாம்

## -நவ்று அமைச்சர்

புகலிடம் கோரும் இலங்கையர் களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால் அவர்கள் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கான உரிமையை கொண்டிருப்பர் என நவ்று நாட்டின் வெளிவிவகார அமைச்சர் கிறேன் கேகே கூறியுள்ளார்.

எனினும், அதிக எண்ணிக்கையான புகலிடக் கோரிக்கையாளர்களை கையாள்வதில் நவ்று நீதித்துறை கொண்டுள்ள ஆற்றல் குறித்து அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மனித உரிமை குழுவொன்று கேள்வி எழுப்பியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் , புகலிடம் கோருவதற்காக கிறிஸ்மஸ் தீவை அடைந்த இலங்கையர்களின் இரண்டாவது குழுவொன்று, பசுபிக் சமுத்திரத் திலுள்ள நவ்று நாட்டுக்கு . நேற்று முன்தினம் அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அவுஸ்திரேலியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களை, நவுறுவில் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு வழங்கப்பட் டுள்ள கூடார வசதிகளில் சில மாற்றங்கள் ஏற்படும்வரை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என நவ்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# இலங்கையில் புடைவை நெசவுத் துறையை மேம்படுத்த இந்தியா ஆர்வம்

இந்தியாவைப் போன்று இலங்கையிலும் நெசவுத் துறையினை மேபடுத்துவதற்கு திறன் மற்றும் தொழில் நுட்ப ரீதியான உதவிகளை வழங்க இந்தியா விருப்பம் கொண்டுள்ளதாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய உயர் நெசவுத் துறை பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று கைத்தொழிற்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீனுடன் அமைச்சில் இடம் பெற்ற சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர். இந்திய நெசவுத் துறை அமைச்சின் செயலாளர் திருமதி கிரான் திங்ரா, இணைச் செயலாளர் ஸ்ரீனிவாஸ், சுனைனா தோமர் உட்பட பலரும் இதன் போது வருகைத் தந்தனர்.

மேலும் இரு தரப்புக்களுக்கு மிடையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது இலங்கைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய அமைச்சர் ஆனந்த ஷர்மாவுடன் நடத்தப் பட்ட பேச்சு வார்த்தையின் பயனாக இலங்கையின் ஆடை உற்பத்திகளுக்கு இந்திய சந்தையில் வாய்ப்புக்கள் எற்படுத்தி கொடுக்க நடவடிக்கை யெடுக்கப் பட்டது. அதே போன்று இரு நாடுகளுக்கு மிடையிலான வர்த்தக உறவுகள் மிகவும் நெருக்கமாக கணாப்படுவதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் சுட்டிக் காட்டினார்.

# லண்டனில் இரு பெண் பொலிசார் சுட்டுக் கொலை!

இங்கிலாந்தில் உள்ளமான் செஸ்டர் நகரில் பிரபலகொள்ளையனாக திகழ்ந்தவன் டேல் கிரகன் (வயது 29). இவன் ஒரு இடத்தில் கொள்ளையடிக்கப் போவதாகபோலீசுக்குதகவல் கிடைத்தது.

இதையடுத்துபெண் பொலிசார் பியானோபோன்(32),நிகோலா ஹ்ஜ் ஆகியோர் அவனை பிடிப்பதற்காக அந்த இடத்துக்கு விரைந்து சென்றனர். அவர்களைப் பார்த்ததும் கொள்ளையன் டேல் கிரகன் அவர்களை நோக்கி சரமாரி யாக சுட்டான்.

கையெறி குண்டுகளையும் வீசினான். பதிலுக்கு பெண் பொலிசாரும் சுட்டனர். ஆனால், கொள்ளையன் சுட்டதில் துரதிருஷ்ட வசமாக இரண்டு பெண் பொலிசாரும் உடம்பில் குண்டுகள் பாய்ந்துசம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த கூடுதல் பொலிசார் அவனைசுற்றி வளைத்து கைது செய்தனர்.

# இலங்கை - இந்திய.....(தொடர்)

ரி.ஜி.ரி.ஈ, 12 நாடுகளில் தனது அலுவலகத்தை கொண்டுள்ளது, அதன் செயலகம் சுவிட்சலாந்தின் ஜெனிவா நகரில் இயங்கி வருகிறது. தமிழ் புலம் பெயர்ந்தவர்கள் இடையே தனது பாராளுமன்ற பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக அது ஒரு தேர்தலையும் நடத்தியது. கற்பனை அரசாங்கமான ரி.ஜி.ரி.ஈ.யின் பிரதம மந்திரியை தவிர, மூன்று துணை பிரதமர், ஏழு அமைச்சர்கள் மற்றும் ஏராளமான எண்ணிக்கையிலான துணை அமைச்சர்கள் உள்ளார்கள்.

ரி.ஜி.ரி.ஈ,தனது தொடர்புகளை தமிழ்நாட்டுடன் முன்னேற்றுவதில் ஆர்வம் காண்பிப்பதன் மூலம் இந்தியாவுக்கு விசேட முக்கியத்துவம் வழங்கியுள்ளது. 2012 ஏப்ரலில், ரி.ஜி.ரி.ஈ பாராளுமன்ற அங்கத்தவர்களாக தமிழ்நாட்டிலுள்ள ஐந்து பேர்களை ரி.ஜி.ரி.ஈ. நியமித்தது.பேராசிரியர் சரஸ்வதி ராஜேந்திரன் என்கிற ரி.ஜி.ரி.ஈ. பாராளுமன்ற அங்கத்தவரை அமைப்பாளராக கொண்ட ரி.ஜி.ரி.ஈ ஒருமைப்பாட்டு மையம் ஒன்று தமிழ் நாட்டில் இயங்கிவருகிறது.

அவர்களிடையே உள்ள வேறுபாடுகளைத் தவிர, தமிழ் புலம் பெயாந்தவர்கள் குழுவானது, ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மீது சாட்டப்பட்டுள்ள யுத்தக் குற்றங்களை சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை செய்யவேண்டும் என்பதை ஒரு பொதுவான விடயமாக எடுத்துக் கொண்டுள்ளார்கள். அவர்களின் சமீபத்திய வெற்றியாக ஜனாதிபதி ராஜபக்ஷ ஐக்கிய இராச்சியத்துக்கான தனது விஜயங்களின்போது கூட்டங்களில் உரையாற்றுவதை தடை செய்ததை குறிப்பிடலாம், அப்படியான சந்தர்ப்பங்கள் அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுவதை ஊக்குவிக்கின்றன. எதிர் காலத்தில் அப்படியான ஒன்று பட்ட செயற்பாடுகளை இன்னமும் அதிகமாக நாம் எதிர்பார்க்கலாம். இந்தக் கட்டத்தில் ஜி.ரி.எப் மற்றும் ரி.ஜி.ரி.ஈ என்பன 2012 மே 19ல் நடந்த முள்ளிவாய்க் கால் ஞாபகார்த்த தின நிகழ்வில் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இந்தியாவின்மீது விசேட அக்கறையை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இந்த முன்னேற்றங்களின் வெளிச்சத்தில், சமீபத்தைய தமிழீழ புத்தாக்க விடயத்தை பொறுத்த மட்டில் எண்பது பிராயங்களில் உள்ள கருணாநிதி தலைமை தாங்கும் திராவிட முன்னேற்ற கழகத்துக்கும் மற்றும் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான இரண்டு பிரதான திராவிடக் கட்சிகளுக்கு இடையேயுள்ள பூனைச் சண்டையாக மாறியுள்ளது, மேலும் குழபபத்தை ஏற்படுத்தியுள்ளது.

திமுக ரெசோவை தீவிரமாக செயற்படுத்துமானால் ரி.ஜி.ரி.ஈ உடன் அதற்குள்ள தொடர்பு உண்மையானதாகும். இது தமிழ் நாட்டை, தேசிய பாதுகாப்புக்கு தீவிரமான ஆபத்துடைய தமிழ் தீவிரவாதத்தை வளர்க்கும் ஒரு நாற்று மேடையாக மாற்றும் அபாயத்தை அதிகரிக்கிறது. ஏற்கனவே இந்த முன்னேற்றங்களையிட்டு ஸ்ரீலங்கா மிகவும் கவலையடைந்துள்ளது. இது ஸ்ரீலங்கா மீதான இந்தியாவின் நலன்களுக்கு பாதகமான உணர்வுகளை ஊதிப் பெருப்பிக்கும். இதன்படி மத்தி மற்றும் தமிழ்நாடு ஆகிய இரண்டும், இரு நாட்டு உறுவுகளும் மோசமாக பாதிப்படைவதற்கு முன்னரே, ஸ்ரீலங்கா தமிழர்களை, தீய வழிகளுக்கு துணை போகும் தமிழ் தீவிர வாதத்திலிருந்து வேறுபடுத்தும் வகையில் தங்கள் அரசியல் நகர்வுகளை, கவனமாக செம்மைப் படுத்த வேண்டும்.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் ஈழப்போரில் வெற்றி பெற்றதன் பின்னர் ஸ்ரீலங்கா ஒரு சக்திமிக்க நாடாக மாறியுள்ளது. அவர் 2016 வரைக்கும் அல்லது அநேகமாக அதற்கு மேலும் அதிகாரத்திலிருப்பார். ஸ்ரீலங்காவின் அரசியல் அடிவானிலிருந்து அவருக்கு சவால் விடத்தக்க எந்த ஒரு தலைவரையும் காணமுடியவில்லை, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அவர் எதிர்கொள்ளவிருக்கும் சவால்கள் பொருளாதார அடிப்படையில் அமைந்தவைகளும் மற்றும் ஸ்ரீலங்கா அரசியலில் நிலைகொண்டுள்ள தமிழ் சிறுபான்மையினரின் தீர்க்கப்படாத அபிலாசைகளுக்கு எவ்வாறு தீர்வு கிடைக்கப் போகிறது என்பதுமே. அவர் தொடர்ந்து உயர் பீடத்தில் ஆட்சி நடத்தப் போவது இந்த இரண்டு சம்பவங்களுக்கும் அவர் எவ்வாறு தீர்வு காணப்போகிறார் என்பதிலேயே தங்கியுள்ளது.

2012 ஜூன் 18ல் இக்கட்டுரை எழுதப்பட்டது. நன்றி: இந்திய வெளிவிவகார ஆய்விதழ்,

(இதன் எழுத்தாளர், கேர்ணல் ஹரிகரன் ஒரு ஓய்வு பெற்ற தெற்காசிய இராணுவ உளவுத் துறை நிபுணர், இந்திய அமைதி காக்கும் படை ஸ்ரீலங்காவில் கடமையாற்றியபோது (1987 - 1990) உளவுத்துறை தலைவராக பணியாற்றியிருந்தார்)

# ரயில் குறுக்கு வீதிகளுக்கு மின்சார வீதி சமிக்ஞையும், எச்சரிக்கை மணியும்

நாட்டிலுள்ள பாதுகாப்பற்ற 230 ரயில் குறுக்கு வீதிகளில் மின்சார வீதி சமிக்கை மற்றும் மின்சார எச்சரிக்கை மணிகளைப் பொரு த்துவதற்கு திட்டமிடப் பட்டுள்ளதாக ரயில்வே திணைக் களம் குறிப்பிட்டுள்ளது. இதற்கமைய விலைமனு தற்போது கோரப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் பி.எ.பீ. ஆரியரத்ன தெரிவித்தார்.

அதேநேரம், நாட்டில் பாதுகாப்பற்ற சுமார் 700 ரயில் குறுக்கு வீதிகள் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சார வீதி சமிக்கை மற்றும் மின்சார எச் சரிக்கை மணிகளை அமைப்பதன் ஊடாக விபத்துக்களை குறைக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

# நாய்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி!

நாய்களின் எண்ணிக்கையில் 50 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் கால்நடை மருத்துவப் பிரிவின் பணிப்பாளர் பீ.எல். ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நாய்களின் எண்ணிக்கை 34 லட்சமாக இருந்தது. நாய்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசாங்கம் 500 லட்ச ரூபாவை செலவிட்டுள்ளது.


வருடாந்தம் மனிதர்களை நாய் கடிக்கும் சுமார் 2,000 சம்பவங்கள் பதிவாவதாகவும் இதற்காக அரசாங்கம் 150 லட்ச ரூபாவை செலவிடுகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பழம் பெருமை கொண்ட புண்ணிய திருத்தலம் கதிர்காமம்



கதிரைமலை காணாத கண் என்ன கண்ணோ, கற்பூர ஒளிகாணாக் கண்ணென்ன கண்ணோ என்று தமிழ்த்தெய்வமாக பண்டு தொட்டு போற்றி இந்துக்களால் வழிபட்டுவரும் முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள கதிர்காமத் திருப்பதியைப் பாடியுள்ளமையை நாம் அறிவோம். கடல் கடந்து முருகபக்தரான அருணகிரி நாத சுவாமிகள் கதிர்காமத் திருத்தலத்திற்கு வருகை தந்து முருகப் பெருமானைத் தரிசித்தமையும், முருகப் பெருமானின் மீது பக்திசுவைகொட்டும் திருப்புகழைப் பாடியமையும் கதிர்காமத் திருத்தல வரலாற்றில் பதிவாகியுள்ளன.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இத்திருத்தலம் அருள்தரும், நம்பிக்கை நல்கும் இந்துத்திருத்தலமாக இருந்துள்ளமையை அறியலாம். துட்டகைமுனு மன்னன் எல்லாள மன்னனுடன் போர்



வள்ளி திருக்கோயில்

செய்யப்போகுமுன் இங்கு சென்று வழிபட்டதாகவும் இத்திருத்தலத்திற்குப் பல்வேறு உதவிகள் செய்ததாகவும் மகாவம்சம் என்ற புத்ததுறவிகளால் எழுதப்பட்ட நூலில் கூறப்பட்டுள்ளது.

கதிர்காமத் திருத்தலத்தின் தோற்றம் கண்டறியப்படவில்லை. ஆனால், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட இதிகாச காலத்திற்கும் முற்பட்ட புராணகால நிகழ்வுகளின் உறைவிடமாகக் கதிர்காமம் கொள்ளப்படுகின்றது. பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுற்பட்ட புராணகால நிகழ்வுகளான வள்ளி திருமணம், சூரனுடனானபோர், சூரனின் அதர்மசிந்தனையை, செயற்பாட்டை முருகப்பெருமான் அடக்கி அவனை ஆட்கொண்டமை போன்ற புராணக் கதைகள் கதிர்காமத்தின் சிறப்பின் பெருமையின் பெட்டகமாகத் திகழ்கின்றது. இந்து சமயமும் அதனோடிணைந்த முருகவழி பாடும் இலங்கைத் திருநாட்டின் தென்பகுதியிலே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சிறப்புப்பெற்றுப் பொழிவுற்று இருந்தமை பெருமைக்கும், புளங்காகிதத்திற்குமானதாகும்.

ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தின் எல்லையில் மாணிக்ககங்கை கரையோரக் கந்தப் பெருமான் கோயில் கொண்டுள்ள வனப்பு மிக்க இத்திருத்தலம் அமைந்துள்ளது. இலங்கையிலுள்ள மிகவும் பிரசித்திபெற்ற யாத்திரைத் தலமாக உள்ள கதிர்காமக் கந்தனை இன,மத,மொழி வேறு பாடின்றி சகலரும் சென்று வழிபடுகின்றனர். முருகன் சந்நிதானத்திலே எந்தவொரு வேறுபாடோ, பாகுபாடோ இன்றி யாவரும்சென்று வழிபடுவது முருகப்பெருமான் மீது கொண்டநம்பிக்கையையும், பக்தியையும் தெளிவுபடுத்துகின்றது.

கதிர்காமத்தில் ஆண்டு தோறும் இடம்பெறும் கொடியேற்றத்துடனான ஆடிவேல் விழா உலகப் புகழ்வாய்ந்தது. சிங்களத்தில் இவ்விழா வினை எசல பெரஹரா என்று கூறுவர். ஆகமவிதிப்படி பூசைகள் நடைபெறாது விட்டாலும் ஆதிவாசிகளின் பண்டைய முறைப்படி வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன. தற்போது வருடாந்த திருவிழா நடைபெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கே யாழ்ப்பாணத்தின் வடமுனையிலிருந்து இலங்கையின் கிழக்குத் திசையிலிருந்து தென்திசையை நோக்கும் போது வரலாற்றுச் சிறப்புமிக்க, புராதன வரலாறுகள் கொண்ட பல முருகப்பெருமான் திருக்கோயில்கள் உள்ளமையைக் காணலாம். வடக்கிலிருந்து கால் நடையாகக் கிழக்குக் கரையோரமாக கதிர்காமக்கந்தனைத் தரிசித்து, அருள் பெற முருகன் அடியார்கள் ஆண்டு தோறும் பாதயாத்திரை செல்வது பல்லாண்டுகளாக பல நூறு ஆண்டுகளாக இடம்பெற்று வருகின்றது.

வடக்கிலிருந்து கால் நடையாக வரும் பக்தர்கள் கிழக்குக் கரையோரமாகவுள்ள திருக்கோயில்களைத் தரிசித்துக் கொண்டு சென்று தமது யாத்திரையைக் கதிர்காமக்கந்தன் திருத்தலத்தில் நிறைவு செய்து கொள்ளும் மரபு ஆதியிலிருந்து நம் நாட்டில் இந்துக்கள் கைக்கொண்டுவரும் பக்தி பூர்வமான மரபாகும்.

இலங்கையின் வடக்கின் கிழக்குக் கரையிலுள்ள செல்வச்சந்நிதியில் கோயில்கொண்டுள்ள முருகப் பொருமான் சந்நிதியிலிருந்து தெற்குநோக்கி தொடரும் போது திருகோணமலை மாவட்டத்தில் மகாவலி கங்கையை அண்டிய வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில் மட்டக்களப்பு மாவட்ட மண்டூர் முருகன் கோயில், சித்தாண்டி முருகன் கோயில், திருச்செந்தூர் முருகன் கோயில் அம்பாறை மாவட்டத்தின் திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி கோயில், உகந்தை முருகன் கோயில் உட்படப் பல பழைமையும், வரலாற்றுப் பெருமையும் கொண்ட முருகப் பெருமான் திருக்கோயில்கள் நிலை பெற்றுள்ளன.

வடக்கேயுள்ள செல்வச்சந்நிதிக்கும் தெற்கேயுள்ள கதிர்காமத்திற்கும் இடைப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள பண்டைய பழம்பெருமை வாய்ந்த முருகன் கோயில்கள் இலங்கையின் கிழக்குக்கரையில் நிலவிய முருக வழிபாட்டின் பழைமையையும், முருக பக்தர்களின் தொன்மை இருப்பையும் வெளிப்படுத்துகின்றன.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நிறுத்தக்காலத்திற்கும் காலம் பூவுலகில் அவதாரம் எடுப்பவர் முருகப் பெருமான் என்பது இந்துக்களின் நம்பிக்கை. உருவமாகவும் உருவமின்றியும் இறைவனை வழிபடுவது நமது மரபு கதிர்காமத் திருத்தலத்தில் கோயில் கொண்டு அருளும் முருகப் பெருமானின் உருவமற்ற அருவத்திருமேனியே மூலஸ்தானத்திலுள்ளது.

முருகப் பெருமானினின் புனிதமான ஆபரணங்களடங்கிய பெட்டியொன்றே முருகப் பெருமானின் அடையாளமாக அங்குள்ளது. வேல்கொண்டு வினைதீர்க்கும் முருகப் பெருமானின் வேலும் உள்ளது.

வள்ளிதெய்வானை சமேதராக இருந்து அண்டிவரும் அடியவர்களுக்கு அருளளித்து, ஆறுதல் தரும் முருகப்பெருமான் குடியிருக்கும் கோயில் பிரதான கோயிலாகவுள்ளது. வள்ளியம்மனுக்கும், தெய்வானை அம்மனுக்கும் தனித்தனிக் கோயில்களுள்ளன. அவ்வாறே ஆதியும் அந்தமுமில்லா அருட்பெரும் சோதியான சிவபெருமானுக்கும், துன்பநிலை அகற்றி தூயநிலை வழங்கும் நம்பிவந்தோரை அணைத்துக்காக்கும் விநாயகப் பெருமானுக்கும் தனிக் கோயில்களுள்ளன.

வேடுவகுலத்தில் வள்ளியம்மனை கந்தப் பெருமான் திருமணம் செய்த திருத்தலமென்ற சிறப்பும் கதிர்காமத்திற்கு உள்ளது, ஒவ்வோராண்டும் மகோற்சவம் தொடங்கும் நாளுக்கு முதல் நாள் இரவு எவரது கண்ணிலும் படாமல் வள்ளியம்மன் கோயில் முற்றத்திலே பந்தல்கால்கள் கொண்டுவந்து வைக்கப்படுவது வழக்கிலுள்ள மரபாகக் கூறப்படுகின்றது. அதாவது வள்ளியின் குலத்தவரான வேடுவர்கள் பந்தல் கால்களை எவரும் காணத நிலையிலே கொண்டுவந்து வைத்துச் செல்வதாக நம்பப்படுகின்றது.

இலங்கையின் ஆதிக்குடிகள் அல்லது ஆதிவாசிகள் என்று கூறப்படும் வேடுவக் குலத் தோரின் முக்கியத்துவம், சிறப்பு என்ப வற்றைத் தொடர்புபடுத்தி வழிபாடு நிகழ்த்த ப்படும் ஒரே திருக்கோயில் கதிர்காமக்கந்தன் கோயில் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கிலுமுள்ள இந்துக்களால் போற்றம்படும் புண்ணிய திருத்தலம் கதிர்காமம். உலகெங்கிலும் பரவிவாழும் இந்துக்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் போது தவறாது கதிர்காமச் கந்தனைச் சென்று தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு இலங்கை தொடர்பில் அறிவூட்டும் கையேடு இலங்கை விமான சேவை விமானங்களில்லுள்ளது. அதில் கதிர்காமத்தைக் குறிப்பிடும்போது இந்துக்களின் புனித இடம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது வெளிநாட்டுமக்கள் இலங்கையில் காலடி எடுத்துவைக்கும் போது கதிர்காமத்தைப் பற்றிய விபரத்தை அறிந்து கொண்டே வருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கதிர்காமத்தை அண்மித்துள்ள ஏழுமலைகளும் இந்துக்களின் புனித இடங்களாகும். வெடிஹிட்டி கந்த என்று இன்று சிங்கள மொழியில் குறிப்பிடப்படும் மலையின் உச்சியிலே முருகன் கோயில் உள்ளது.

விபூதிமலையில் இயற்கையாகவே திருநீறு விளைகின்றது. கதிர்காமத்தில் பெறப்படும் திருநீறு அங்குள்ள மலையிலிருந்து இயற்கையாகவே கிடைக்கும். வெண்மண்ணாகும். இவ்வாறு பல்வேறு சிறப்புக்களின் உறைவிடமான கதிர்காமத்திருத்தலம் புனிதம் நிறைந்தது. பெருமை கொண்டது. ஞானத் தின் நாயகனான முருகப்பெருமான் நானிலம் போற்றும் நல்லருள் வழக்கும் பேரரு ளாளன். முருகப்பெருமானின் அவதாரங்கள் சிறப்புக்குரியவை. இந்துத் தெய்வங்களுக்குப் பிறப்புமில்லை. இறப்புமில்லை. அவர்கள் நித்திய பரம்பொருள்கள் அதனால் அவர்கள் உலகிலே உருக்கொண்டு தோன்றுவதை பிறப்பு என்று கூறாது அவதாரம் என்கின்றோம். இந்துக்களின் புராண, இதிகாச வரலாறுகளை நோக்கும் போது தர்மத்தைக்காக்க, அதர்மத்தை அழிக்க இறைவன் உலகில் அவதரிப்பார் என்பது அறியக் கிடக்கின்றது. கதிர்காமத் திருத்தலத்தில் உறையும் எம் பெருமான் முருகனது புராணக் கதையும் அவ்வாறானதே. வாழும் தெய்வம் முருகன் வள்ளி தெய்வானையுடன் உறையும் கதிர்காமத்திருத்தலம் அல்லபடுவோ ருக்கு ஆறுதல் வழங்கும் புண்ணிய பூமி புனிதபூமி. நம்புவோம் கதிர்காமக் கந்தனை நலந்தந்து காத்தருள்வான் அவன் எங்களை.




# பல்லின மக்கள் வாழும் இலங்கையில் தமிழ், சிங்கள மொழியறிவின் அவசியம்

சுதந்திர இலங்கைக்கு பின்னரான காலகட்டங்களில் மொழி ரீதியான பிரச்சினைகள் பல ஏற்பட்டன. அதன் காரணமாக இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வின்மை ஏற்பட்டது. இருப்பினும் அண்மையக் காலங்களில் மாற்றுத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறு முன்வைக்கப்பட்ட திட்டங்களுக்குள் முதன்மையானது மொழி பற்றியதாகும்.

அந்த வகையில் மொழி உரிமை மிகவும் காத்திரமான ஒரு செயற்பாட்டுக்கு வித்திட்டது எனலாம். தமிழ் பேசும் மக்களின் மொழி தொடர்பான உரிமைகள் மறுக்கப்பட்டு மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் முன்னர் ஏற்பட்டன. பின்னர் சிறுபான்மைச் சமுதாயத்தின் மொழி உரிமை அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரகாரம் சீர் செய்யப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் மொழி உரிமையானது அடிப்படை உரிமையாக கொள்ளப்படுகிறது. அரசியலமைப்பின் 111 ஆம் அத்தியாயத்தின்படி அடிப்படை உரிமைகள் பற்றிய ஏற்பாடுகளை இது கொண்டுள்ளது. சமத்துவத்திற்கான உரிமை, கலாசார உரிமை, மொழி உரிமை ஆகியன அடிப்படை உரிமைகளாகக்




கொள்ளப்படுகின்றன.


அதாவது சமத்துவத்திற்கான உரிமைகள் பற்றிய ஏற்பாட்டின் பிரகாரம் சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்பட உரித்துடையவர்கள். இனம், மொழி, சமயம் போன்ற காரணங்களினால் எவருக்கும் பாரபட்சம் காட்டக்கூடாது.

உயர் பதவியில் சேவையாற்றுகின்ற போது தாய்மொழி தவிர்ந்த ஏதேனும் ஒரு மொழியை அறிந்திருத்தல் அவசியமானது.

சர்வதேச சாசனங்கள் மொழி உரிமை மற்றும் மொழி அடிப்படையிலான பாகுபாட்டிற்கு எதிரான சுதந்திரம் என்பன பற்றிய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 1ஏ ஆம் பிரிவின்படி மொழி என்ற தலைப்பில் மொழி உரிமைகள் பற்றிய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. அரசியலமைப்பு 13வது திருத்தச் சட்டமும், 16 ஆவது திருத்தச் சட்டத்தின்படியும் தமிழ் மொழியின் அரசியலமைப்பு தொடர்பான முன்னேற்றகரமான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தி நின்றன. தமிழ் மொழியானது அரசகரும மொழி, தேசிய மொழி, பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை மொழி, கல்வி மொழி, நிருவாக மொழி, சட்டவாக்க மொழி, நீதிமன்ற மொழி ஆகியன அரசியலமைப்பு அந்தஸ்தினை கொண்டுள்ளன.

சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாக உள்ளன. ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் தேசிய மொழிகளாக சிங்களமும் தமிழும் உள்ளன. ஆதலால் பாராளுமன்றத்திலும், மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளிலும் அதன் உறுப்பினர்கள் தேசிய மொழியில் கடமையாற்றுவதற்கான உரிமை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். எந்தவொரு நபரும் எந்தவொரு தேசிய மொழியிலும் கல்வி கற்பதற்கு உரித்துடையவராவார். அரச பல்கலைக்கழகத்தில் தனது கற்கையினை ஏதேனும் ஒரு தேசிய மொழியில் கற்கவும் (அவர் விரும்பும் தேசிய மொழி அந்த நிறுவனத்தில் அமைந்திருக்க வேண்டும்) உரித்துடையவராவார்.




மேலும் பகிரங்க சேவை, நீதித்துறை, மாகாண பகிரங்கச் சேவை, உள்ளூராட்சி சேவை அல்லது ஏதேனும் பகிரங்க நிறுவனத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான ஏதேனும் பரீட்சை ஒன்றில் தேசிய மொழி ஒன்றில் தோற்ற உரிமை பெற்றவராகவும் கணிக்கப்படுகின்றார். ஆயினும் அவரது கடமையை நிறைவேற்ற ஏதேனும் தேசிய மொழியை அறிந்திருத்தல் அவசியமாயின் அம்மொழியிலான தகைமையைத் தேடிக் கொள்வதும் நன்று எனக் கூறப்படுகிறது.

மேலும் சிங்களமும், தமிழும் நாடு முழுவதுக்குமான நிருவாக மொழிகளாக இருப்பதுடன், வடக்கு, கிழக்கு மாகாணம் தவிர்ந்த இலங்கையின் எல்லா மாகாணங்களிலும் சிங்களம் நிருவாக மொழியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பொதுப் பதிவேடுகளை பேணுவதற்கும், பகிரங்க நிறுவனங்களில் அலுவல்களை சிங்கள மொழியில் நடத்துவதற்கும் உரித்துடையன எனவும் மேலுள்ள அத்தியாயத்தில் கூறப்படுகின்ற விடயங்களாகும்.

இதற்காகத்தான் இன்றைய பாடசாலைக் கலைத்திட்டத்தில் குறிப்பாக ஆரம்ப வகுப்புக்களில் மொழிப் பாடத்தின் மீதான கண்ணோட்டங்களுக்கு அதிக அக்கறை செலுத்தப்பட்டு வருகின்றது. தாய் மொழியின் மீதான பற்று உரிய முறையில் மாணவர்களுக்கு ஊட்டப்படுவதுடன், இணைப்பு மொழியான ஆங்கிலத்தை ஒவ்வொரு மாணவர்களும் அறிந்து கற்றுணர வேண்டும் என்பதற்காகவே செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் தரம் ஒன்றிலிருந்தே பயன்பாட்டில் உள்ளது.



இதன் மூலம் அனைத்து மாணவர்களும் ஆங்கிலத்தைப் பயன்படுத்துதல் தொடர்பான அனுபவத்தைப் பெறுகின்றனர். இதன் மூலம் மொழியின் அவசியம் ஆரம்பப் பருவத்தில் உணர்த்தப் படுவதை அவதானிக்கலாம்.

அது மட்டுமன்றி இரண்டாம் மொழி என்கிற அடிப்படையில் தமிழ் பேசுகின்றவர்களுக்கு சிங்களமும், சிங்களத்தை தாய்மொழியாக கொண்டவர்களுக்கு தமிழும் பாடசாலைகளில் ஆரம்ப மட்டத்திலிருந்து கற்பிக்கப் படுகின்றன. இவ்வாறு இரண்டாம் மொழி கற்பதன் ஊடாக நாம் இலங்கையர் என்ற உணர்வு வலுவடையும். தம்முடன் வாழும் சகோதர மக்கள் பயன்படுத்தும் மொழியைக் கற்று ஒருவரோடு ஒருவர் புரிந்துணர்வுடன் செயற்படக்கூடிய திறனை மாணவரிடத்தே விருத்தி செய்யும் நோக்கைக் கொண்டதாகவும் அமையும்.

மேலும் உயிரோட்டமான தேசிய ஒருமைப்பாட்டையும் தேசிய ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு அவசியமான ஆரம்ப அடித்தளத்தை இடுவதற்குமாக இரண்டாவது தேசிய மொழியை ஒவ்வொருவரும் கற்றல் உறுதுணையாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது பிரச்சினைக்கு தீர்வாகவே அமைந்துவிடும் என்பதனால்தான் தேசிய மொழிகளை தேசமக்கள் அனைவரும் கற்றுக்கொள்வதற்கான அடிப்படைகள் பாடசாலை மட்டத்தில் மொழித்தினங்கள் போன்றன ஊடாகவும் இன்று முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறாக இலங்கையில் காணப்படுகின்ற மொழியின் உரிமைகள் மீதான கண்ணோட்டத்தின் பிரகாரம் நமது தாய் மொழியான தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

இன நல்லுறவுக்கான ஆரம்பம் மொழி ஆகும். அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அனைவரும் இரண்டு மொழிகளைக் கற்பதன் அவசியம், மும்மொழியிலான பெயர்ப் பலகைகள் போன்றவற்றை அமுல்படுத்துவதன் அவசியத்தை குறிப்பிட்டு வருகின்றார். இவை வெற்றியளிக்கின்றபோது நிச்சயம் இன விரிசலுக்கான சந்தேகப் பார்வை இல்லாமலாகி விடும் என்பதில் சந்தேகமில்லை.

எனவேதான், நாட்டின் இன்னொரு பிரிவினர் பேசுகின்ற சிங்கள மொழியை நாமும், தமிழ் மொழியை சிங்களவரும் சரியான முறையில் கற்றுத் தேறுகின்ற போது கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்டிருந்த தப்பபிப்பிராயங்கள் இனிவரும் காலங்களில் ஏற்படாதிருக்கும். இன்று ஆங்கில மொழி உயர்தரம் கற்பதற்கும், பல்கலைக் கழக மட்டத்தில் பாடங்களைக் கற்றுக்கொள்ளவும் தேவையான ஒன்றாக காணப்படுறது.

ஆதலால்தான் மாணவர்கள் பாடசாலைகளில் மொழியறிவினை உதாசீனம் செய்யாது மொழியின் அவசியத்தை உணர்ந்து உலக பொது மொழியான ஆங்கிலத்தையும் சரியான முறையில் கற்றுணர்கின்ற போது நாமும், நாடும், நமது எதிர்காலமும் சிறப்பாய் அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

# கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமான எதிர்க்கட்சியாக செயற்படும்

## சுரேஷ் எம்.பி.

கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவராக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாண சபை தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு 11 ஆசங்களை கைப்பற்றி இரண்டாவது இடத்தைப் பெற்றது. இந்நிலையில் ஏழு ஆசனங்களை கைப்பற்றி மூன்றாவது இடத்தினை பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கரஸுடன் இணைந்து கிழக்கு மாகாண ஆட்சியை ஏற்படுத்த தமிழ் தேசிய கூட்டமைப்பு அழைப்பு விடுத்தது.

எனினும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கரஸ் கிழக்கு மாகாண ஆட்சியை ஏற்படுத்த ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிற்கு ஆதரவு வழங்கியது.

இந்நிலையில், ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து பலமான எதிர்க்கட்சியை கிழக்கு மாகாண சபையில் ஏற்படுத்தவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் குறிப்பிட்டார்.

எனினும் யாரை எதிர்க்கட்சி தலைவராக நியமிப்பது என்பது தொடர்பில் தீர்மானிக்கவில்லை. இது தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விரைவில் கூடி தீர்மானமொன்றை எடுக்கவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்ற முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்ற முன்னாள் மாகாண கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபானி ஆகிய இருவரில் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இடையூறு ஏற்படுத்த வேண்டாம்

பொதுமக்கள் மற்றும் பாதசாரதிகர்களுக்கு இடையூறு எற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வேண்டாம் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்தே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரொஹண தெரிவித்தார்.

# சப்ரகமுவ, வடமத்திய மாகாணங்களின் எதிர்க்கட்சித் தலைவர்கள் நியமனம்

சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணசபைகளின் எதிர்க்கட்சித் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்ட டாக்டர் துசிதா விஜேமான்ன மற்றும் கிங்ஸ் நெல்சன் ஆகியோர் நேற்று புதன்கிழமை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை, சப்ரகமுவவுக்கான ஐ.தே.க அமைப்பாளராக ஹசித முகாந்திரம் நியமிக்கப்பட்டதோடு வடமத்திய மாகாணத்துக்காக அமைப்பாளராக சந்திம கமகேவும் நியமிக்கப்பட்டார்.

இந்நிகழ்வு சிறிகொத்தவில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கட்சியில் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயலத் ஜயவர்தன, ரவி கருணாநாயக்க, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோரம் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் பதவியை சந்திரசேன இராஜினாமா

தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதாக கமநல மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன நேற்றுப் புதன்கிழமை அறிவித்துள்ளார்.

தனது சகோதரரான மாகாண சபை உறுப்பினர் எஸ்.எம்.ரஞ்சித்திற்கு வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவியினை வழங்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்தமையினாலேயே அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதாக அவர் தெரிவித்தார். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவர் அமைச்சுப் பதவிகளை ஏக காலத்தில் வகிக்க முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நிறைவேற்றுக்குழு தெரிவித்ததாக எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

இந்நிலையில், தனது சகோதரருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்படுவதற்காக தனது அமைச்சர் பதவியை விட்டுக்கொடுப்பதாக எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆர்ப்பாட்டம்

முஹம்மது நபி (ஸல்) அலைஹிவஸ்ஸலம் அவர்களை களங்கப்படுத்தும் வகையில் அமெரிக்காவினால் வெளியிடப்பட்ட திரைப் படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பெரும் எண்ணிக்கையான முஸ்லிம்கள் நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஊர்வலமாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பாக நின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக காலி முகத்திடல் பகுதியின் காலி வீதி வரையான வீதி தற்காலிகமாக மூடப்பட்டதாக அறிவிக்கப பட்டுள்ளது.

# ஐ.நா. சபை அதிகாரிகள் வவுனியாவில்

மீள்குடியேற்றம், நிலக்கண்ணிவெடி அகற்றல் மற்றும் சிவில் நிர்வாகம் தொடர்பில் ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் குழு நேற்றுப் புதன்கிழமை வவுனியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய பசுபிக், மத்திய கிழக்கு, வட அமெரிக்க பிரிவுக்கான பொறுப்பாளர் ஹன்னி மெகாலி தலைமையிலான இக்குழு, வவுனியா மாவட்டச் செயலாளரைச் சந்தித்து அங்குள்ள நிலைமைகள் குறித்து கேட்டறிந்தது.

இதன்போது, வவுனியாவில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள், மீள்குடியேற்றம், நிலக்கண்ணிவெடி அகற்றல், மற்றும் பொதுமக்களுக்கான அடிப்படைத் தேவை வசதிகள் என்பன 100 சதவீதமளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் இவ்வாறான நடவடிக்கைகளிக் போது எவரது உரிமையும் மீறப்படவில்லை என்றும், நேற்று நடைபெற்ற ஐ.நா. அதிகாரிகளுடனான சந்திப்பில் வவுனியா அரச அதிபர் தெரிவித்தார்.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை விமர்சிக்க ஆசாத் சாலிக்கு அருகதை கிடையாது

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெமீல்

முஸ்லிம் சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் தீர்வு காணும் நோக்குடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் தீர்க்க தரிசனத்துடன் மேற்கொள்ளும் தீர்மானங்களை விமர்சிப்பதற்கு ஆசாத் சாலிக்கு எந்த அருகதையும் கிடையாது என அக்கட்சியின் இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எம்.ஜெமீல் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர முன்னாள் பிரதி மேயரும் நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபை தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டவருமான ஆசாத் சாலி, முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பில் ஊடகங்களில் வெளியிட்டிருக்கும் விமர்சனங்களை கண்டித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே மாகாண சபை உறுப்பினர் ஜெமீல் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது

நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது கிழக்கின் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக எழுச்சி பெற்றிருப்பதன் காரணமாக கிழக்கில் நல்லாட்சி ஒன்றை அமைக்கும் கடிவாளம் முஸ்லிம் காங்கிரசின் கரங்களில் கிடைத்திருக்கிறது.

அந்த வகையில் கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை நிறுவுவது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொண்டிருக்கும் தூரநோக்குடனான தீர்மானம் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது.

குறுகிய சிந்தனைகளுக்கு அப்பால் பரந்த மனப்பாங்குடன் நீண்ட கால அடிப்படையில் யதார்த்தபூர்வமாக சிந்திக்கும் போது கட்சியின் முன்னெடுப்புகள் யாவும் சிறப்பாக அமைந்திருப்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

மர்ஹூம் அஷ்ரப் இனப்பிரச்சினை தீர்வொன்றின் போது கிழக்கில் முஸ்லிம் மாகாணம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்பி வந்துள்ளார். ஆனால் இன்று இனப்பிரச்சினை தீர்வுக்கு அப்பால் முழுக் கிழக்கு மாகாணமும் ஒரு முஸ்லிம் மாகாணமாக பரிணமிக்கும் வகையில் முஸ்லிம் காங்கிரசின் பேரம் பேசும் சக்தி பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம் முதலமைச்சர் என்கின்ற விடயத்தில் விடாப்பிடியாக நின்று அதனை வெற்றி கொண்டிருகிறார். அத்துடன் சமூகம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்கும் அரசிடம் தீர்வு கோரி அவற்றுக்கான உத்தரவாதங்களைப் பெற்றுள்ளதுடன் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் மற்றும் நீண்ட கால அபிலாஷைகள் தொடர்பில் அரசுடன் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றையும் செய்து கொண்டே அரசாங்கத்துடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு எமது தலைமைத்துவம் உடன்பட்டுள் ளது.

அத்துடன் இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சமூக நிர்வாக விடயங்கள் குறித்த அதிகாரங்கள் தொடர்பிலும் உடன்பாடு காணப்பட்டு அவற்றை குறுகிய காலத்தினுள் அமுல் நடத்துவதற்கான உத்தரவாதங்களும் அரசிடம் இருந்து பெறப்பட்டுள்ளன.

ஆனால் யதார்த்தங்கள் - சாத்தியப்பாடுகள் குறித்து சற்றும் சிந்திக்காமல் முதலமைச்சர் பதவி ஒன்றுக்காக மட்டும் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைய வேண்டும் என்பதே ஆசாத் சாலி எழுப்பும் கோஷமாகும்.

ஆனால் அரசுடன் இணைந்து முதலமைச்சர் பதவிக்கு தாம் விரும்பிய ஒரு முஸ்லிமை நியமித்துக் கொண்டு இரண்டு பலம் பொருந்திய மாகாண அமைச்சுகளை பெறும் வாய்ப்பை முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுள்ளது. இதன் மூலம் கிழக்கு மாகாண சபை அமைச்சரவையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை முஸ்லிம் சமூகம் கொண்டிருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முதியோர் கொடுப்பனவுக்காக வவுனியாவில் 1650 பேர் தெரிவு

2011ஆம் ஆண்டு அறிமுகமான 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான 1000 ரூபா கொடுப்பனவுத் திட்டத்திற்கு வவுனியாவில் இருந்து 1650 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முதியவர்களுக்கு அறிவிக்கப்பட்ட இந்த உதவி அவர்களது ஆயுட்காலம் முழுவதும் தொடர்ந்து வழங்கப்படவுள்ளது. பொதுஜன மாதாந்த உதவிப்பணம் மற்றும் சமுர்த்தி உதவிகள் பெற்று வந்த முதியவர்கள் இதற்கென தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

2012ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் இந்தத் திட்டம் அமுலாகும் வகையில் செப்டெம்பர் மாதம் முதல் நிலுவைத் தொகை உட்பட தெரிவாகியுள்ள அனைத்து முதியவர்களும் இந்த உதவியை தேசிய சேமிப்பு வங்கியில் அவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

பிரதேச செயலக மட்டங்களில் சமூக சேவை உத்தியோகத்தர்கள், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ் தெரிவானோரின் பட்டியலை ஒக்டோபர் மாதம் முதல் பிரதேச செயலகங்களில் பார்வையிட முடியும். இந்தக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு வடமாகாணத்தில் முதல் தடவையாக ஆரம்பித்து வைக்கும் பொருட்டு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திர தலைமையில் வவுனியா தெற்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

செட்டிகுள பிரதேச செயலகத்தில் இருந்து 315 பேரும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் இருந்து 210 பேரும் வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தில் இருந்து 250 பேரும் வவுனியா நகரப்பிரதேச செயலகத்தில் இருந்து 890 பேருமாக வவுனியா மாவட்டத்தில் 1650 பேர் தெரிவாகியுள்ளனர்.

# சமூக வானொலியின் பணிகளும் செயற்பாடுகளும்

***வர்த்தக நோக்கமின்றி செயற்படுதல்***

சமூகவானொலி தொடர்பான நிபுணர்களிடையே அதிகமான கருத்தொருமைப்பாட்டையும் குறைவான கருத்து முரண்பாட்டையும் கொண்ட அம்சங்களில் இதுவும் ஒன்று. இயல்பில் நிதியீட்டல் யந்திரமாக சமூகவானொலி செயற்பட முடியாது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இலாபமீட்டும் எந்தவிதமான பணியினையும் சமூகவானொலி செய்யாது. வருவாய் மட்டத்தை உயர்த்திக்கொள்ளும் நோக்கில் விளம்பரங்களையும் அது கண்டபடி உள்வாங்கிக் கொள்ளாது. பணமா, சமூகநலமா என வருகின்ற போது சமூகவானொலி சமூகநலனிலேயே பெரிதும் கரிசனை காட்டும். மறுதலையாக, சமூகவானொலி இலாபமீட்டுவதை நோக்காகக் கொண்டிராது என்பதால், அது பணத்தினைத் தேடித்தரும் எந்த விதமான காரியங்களிலும் ஈடுபடாது என்பது அர்த்தமல்ல. இலாபத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக வர்த்தகர்களைத் திருப்திப்படுத்தும் நிகழ்ச்சிகளையே வர்த்தக வானொலி கொண்டிருக்கும். சமூக வானொலியைப் பொறுத்தவரை மக்களையன்றி அது யாரையும் திருப்திப்படுத்த வேண்டியதில்லை.

ஒழுங்கான வருமானம் இல்லாத நிலையில் சில சமூக வானொலிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவை விரும்பியோ விரும்பாமலோ விளம்பரங்களை உள்வாங்கிக் கொண்டாலேயன்றி தமது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ள முடியாது. இந்த இக்கட்டான நிலை இலங்கையின் சமூகவானொலிகளை அதிகம் பாதித்த விடயமாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சமூகவானொலி விளம்பரங்களை உள்வாங்கிக் கொள்ளலாமா? எவ்வளவு அல்லது எவ்வாறு உள்வாங்கிக் கொள்ளலாம் என்பது இதுவரை ஒரு வாதப் பொருளாக இருந்து வருகின்றது.

ஒரு சமூகவானொலி சமூகத்தின் பேரிலான தனது இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள சில விளம்பரங்களை உள்வாங்கிக் கொள்வதில் பிழையில்லை. முடிந்தால் அவ்வாறான விளம்பரங்கள் குறைந்த நேரத்தை உடையதாக, சிறந்த சமூக உள்ளடக்கத்தையுடையதாக, விளம்பர ஒழுக்கவியலை பேணக்கூடியதாக இருப்பதுடன், அடிக்கடி ஒலிப்பதன் மூலம் மக்களின் இரசனையைப் பாதிக்காதவாறு இருக்கலாம் என்பது கலாநிதி ஆர். ஸ்ரீதரின் அபிப்பிராயமாகும்.

சமூகவானொலி இலாப நோக்கமற்றதாக இருத்தல் வேண்டும் எனும் போது அது நிதிவசதியற்ற ஏழையாக இருத்தல் வேண்டும் என்பது பொருளன்று. அது விளம்பரங்களை உள்வாங்கிக்கொள்ளக் கூடாது என்பதும் அல்ல. சமூக வானொலி மேலதிகமாகத் தேடிக்கொள்ளும் தொகை மீண்டும் மக்களையும் சமூகத்தையும் நோக்கி மீள் மூலதனமாக மாற்றப்படல் வேண்டும்.

விளம்பரம் என்பது நிபந்தனைகளுக்குட்பட்ட விதத்தில் இடம்பெறலாம். நிகழ்ச்சிகளின் தரத்தினை அதிகரித்து சமூகத்துடனான வலுவான உறவு நிலையைக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சிகளைப் படைத்தல், நிலைய அதிகாரிகளின் செயற்பாடுகளை ஊக்குவித்தல், மக்களுக்கு காத்திரமான சேவையினை பெற்றுக்கொடுத்தல், மிக முக்கியமான வளங்களைப் பெருக்கிக் கொள்ளல் என்பனவற்றுக்காக நிபந்தனைகளுடன் கூடிய விளம்பரங்களையும் சமூக வானொலி உள்வாங்கிக் கொள்ளலாம்.

***பல்வகை நிகழ்ச்சிகளைக் கொண்டிருத்தல்***

சமூக வானொலியின் ஒட்டுமொத்தப் பணி சமூகத்தை வலுவடையச் செய்தலாகும். சமூக, பொருளாதார, அரசியல் என சகல துறைகளிலும் மக்களை ஆற்றல் பெற்றவர்களாக மாற்றக்கூடிய உள்ளடங்கங்களையே சமூக வானொலி வழங்கும். எல்லாவற்றுக்கும் மேலாக உடனுக்குடன் புதுப்புதுத் தகவல்களை சமூகமறியச் செய்து மக்களை புத்திஜீவிகளாக வாழவைத்தல் இதன் மற்றுமொரு பணியாகும். சமூக வானொலியின் நிகழ்ச்சிகள் ஒரு குழுவினரால் வழங்கப்படலாம் ஒரு தனிப்பட்டவரால் வழங்கப்படலாம் கற்றவர் - கல்லாதவர், ஆண் - பெண் என்று எவராலும் வழங்கப்படலாம்.

சமூக வானொலியின் நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை அது உள்ளடக்கத்தில் வெவ்வேறு அம்சங்களைக் கொண்டிருக்கும். கல்வி, அறிவியல், தகவல் தொழில்நுட்பம், சுகாதாரம், மனித உரிமை, கலை, கலாசாரம், விளையாட்டு, உள்ளூர் வாழ்வியல், உள்ளூர் இசைப் பாரம்பரியம், அபிவிருத்தி, சமயம், நேரடி ஒலிபரப்பு என சமூகவானொலி பல்வேறு அம்சங்களை மக்கள் வேண்டுகோளுக்கு ஏற்ப உள்ளீடாகக் கொண்டிருக்கும். அந்தவகையில், நிகழ்ச்சி களைப் படைப்பதிலும் உள்ளடக்கத்திலும் சமூக வானொலி பன்மைத்துவப் போக்கினைக் கடைப்பிடிக்கும்.

*(மிகுதி அடுத்தவாரம்)*

***எம்.சி. ரஸ்மின்***

*(நன்றி: சமூக வானொலி - மனித வலுவாக்கத்திற்கான ஊடகம்)*

# வானலை நாதம்

## யாழ்ப்பாணத்தில் “தென்றல்”

## தடையின்றி வீசும் நாள் எப்போது வரும்?

**- ஒரு நேயரின் ஆதங்கம்**

நான் நீண்ட காலமாகவே இலங்கை வானொலியின் அபிமானி. ஆரம்ப காலத்தில் தமிழ்ச் சேவை இரண்டு, வர்த்தக சேவை, சர்வதேச வானொலி, வானம்பாடி சேவை போன்ற ஒலிபரப்புச் சேவைகளின் ஊடாக பலதரப்பட்ட காலப்பகுதிகளில் பல நிகழ்ச்சிகளைக் கேட்டு ரசித்தவன். இப்போது தென்றல் என அழைக்கப்படும் வர்த்தக சேவையில் அதிகாலை 5.00 மணிக்கு ஒலிபரப்பு ஆரம்பமாகும்போது பக்திப் பாடல்கள் என்று தொடங்கி, பின்னர் நெஞ்சில் நிறைந்தவை, புலரும் பொழுது, பிறந்த நாள் வாழ்த்து, பொங்கும் பூம்புனல், நீங்கள் கேட்டவை, விவசாய நேயர் விருப்பம், மகளிர் கேட்டவை, உங்கள் விருப்பம், என் விருப்பம், இன்றைய நேயர், தேர்ந்த இசை, இசை இன்பம், ஆண் குரல், பெண்குரல், இன்றைய ஜோடி, ஜோடி மாற்றம் ஒன்றோடு ஒன்று, இருவர் பாடியது, கவியுள்ளம், பாட்டும் பதமும், இசைமாலை, இசையும் கதையும், தேனும் பாலும், ஒருபடப்பாடல், ஈழத்துப் பாடல், பொப்பிசைப் பாடல், பன்மொழிப் பாடல், ஹிந்திப் பாடல், விடுமுறை விருப்பம், புதுவெள்ளம், இன்றைய நட்சத்திரம், திரைவிருந்து, ஒலிச்சித்திரம், பூவும் பொட்டும் - மங்கையர் மஞ்சரி, வாலிப வட்டம், அந்தாதி, நினைவில் நின்றவை, பாட்டுக்குப் பாட்டு, விநோத வேளை, அரங்கேற்றம், ஒருசொற் கோவை, இன்பமும் துன்பமும், மலர்ந்தும் மலராதவை, பொதிகைத் தென்றல், அசலும் நகலும், இரவின் மடியில் - இப்படியாக பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகி வந்திருப்பதுடன், இரவு 11.30 மணிக்கு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பலதரப்பட்ட காலப்பகுதிகளில் கேட்டு ரசித்தவர்கள் இப்போது இதனை ஞாபகப்படுத்தி அதன் நினைவுகளில் லயித்து, ஒரு பெருமூச்சை மட்டும் விடுவதற்கே முடிகிறது.

தற்போது இலங்கை வானொலியின் நிகழ்ச்சிகளை பண்பலை மூலமே கேட்க முடிகிறது. இதில் தென்றல், யாழ் சேவை நிகழ்ச்சிகளே ஒலிபரப்பாகி வருகின்றன. எனினும் அண்மைக் காலமாக தென்றல் சேவையை முழுமையாகக் கேட்க முடியாத நிலை யாழ்ப்பாண நேயர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. தென்றல் ஒலிபரப்பு இடம்பெற்றுவந்த அலைவரிசை யாழ் சேவைக்கு ஒதுக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும்.

நான் ஒரு நிறுவனத்தில் தனியார் பாதுகாப்பு சேவை உத்தியோகத்தராக கடமையாற்றி வருகிறேன். இரவு வேளையில் கடமைபுரியும்போது, வானொலி இன்றியமையாத சாதனமாக இருக்கிறது. எத்தனையோ தனியார் வானொலிகள் தமது சேவையினை போட்டிபோட்டுக்கொண்டு வழங்கினாலும் நான் எப்போதுமே அன்னை வானொலியான தென்றல் சேவையினையே விரும்பிக் கேட்பதுண்டு. இது காலை 5.00 மணிக்கு பக்திப் பாடல் நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகி இரவு 11.30க்கு ‘இரவின் மடியில்’ நிகழ்ச்சியுடன் முடிவடையும். சிலகாலம் இருபத்தி நான்கு மணி நேர ஒலிபரப்பாகவும் நடைபெற்ற இச்சேவை இப்போது இரவு 10.00 மணியுடன் நிறைவடைகிறது.

எனினும் யாழ்ப்பாணத்திலுள்ள என்போன்ற நேயர்கள் தென்றலில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளை - குறிப்பாக எங்கேயும் எப்போதும், பொற்குவியல், ஆராதனா, சந்தித்த வேளை, இராகதீபம், ஹலோ தென்றல் போன்ற பல நிகழ்ச்சிகளை கேட்க முடியாதுள்ளது..

சில வேளைகளில் தென்றல் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும். ஆனால் இரைச்சல் சத்தம் ஏற்பட்டு நிகழ்ச்சிகளை கேட்கமுடியாத நிலையை உருவாக்கிவிடும். இது நிகழ்ச்சிகளை விருப்புடன் கேட்டுவரும் என்போன்றவர்களுக்கு மிகவும் ஏமாற்றமே.

யாழ்ப்பாண நேயர்களுக்கு தென்றல் சேவையின் நிகழ்ச்சிகளை தடையின்றி - முழுமையாக வழங்கி, தென்றலின் அபிமானிகள் எல்லோரும் வேறு சேவையினை நாடிச் செல்வதை நிறுத்த வேண்டும்.

இதில் கேள்விக்கும், கேலிக்கும் உரிய விடயம் என்னவென்றால் ஏனைய தனியார் வானொலிகள் எவ்விதமான இடையூறும் இன்றி யாழ்ப்பாணத்தில் மிகத் தெளிவாக - துல்லியமாக நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதன் ஊடாக தமது சேவையினை வழங்கிவரும் இவ்வேளையில் அரச சார்பான இலங்கை வானொலியின் தென்றல் மாத்திரம் ஏன் சீரற்ற சேவையினை எமக்கு வழங்க வேண்டும்?

சம்பந்தப்பட்டவர்களுக்கு இது சமர்ப்பணம்.

***- மானியம்பதி உதயாகணேசு.***

# வானொலி அறிவிப்பாளரின் சிறப்பியல்புகள்

மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த முதல் நாளன்றே ஒரு மாணவன் மூளை அறுவை சிகிச்சை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. அதேபோலச் சட்டக் கல்லூரியில் முதல் நாளே மிக முக்கிய வழக்கில் வாதாடும்படி கேட்கப்படுவதில்லை. இவற்றுக்கெல்லாம் குறைந்தது ஐந்து வருடகாலப் பயிற்சி தேவைப்படுகிறது. அந்தந்தத் துறைகளில் அநுபவமிக்க நிபுணர்களின் வழிகாட்டல் தேவைப்படுகிறது.

அதேபோல அறிவிப்பாளராகப் புதிதாக ஒரு வானொலி நிலையத்தில் இணையும் ஓர் இளைஞனோ யுவதியோ முதல் நாளே செய்திகள் வாசிக்கும்படி அல்லது ஓர் அமைச்சரைப் பேட்டி காணும்படி அனுப்பப்படுவதில்லை.

வகுப்பறைப் பயிற்சிகள் நடக்கின்றனவோ இல்லையோ, கலையகப் பயிற்சிகள் ஆரம்பிக்கும்போது, கலையகத்தில் ஒலிபரப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் நிகழ்ச்சி அறிவிப்பாளர் சொல்வதை, செய்வதை உற்றுக் கவனிக்கும்படி - புதிய ‘பயிற்சி அறிவிப்பாளர்கள்’ கேட்கப்படுவது வழக்கம். அவ்வப்போது அந்த நிகழ்ச்சி அறிவிப்பாளரே - புதியவர்களுக்கு வேண்டிய விளக்கங்களையும் வழங்குவார்.

எது எவ்வாறாயினும், உங்கள் முதல் நாளன்றே நீங்கள் கலையகத்தில் ஒலிவாங்கியின் முன்னால் அமர்த்தப்படுவீர்கள் என்றோ, செய்திகளோ அறிவிப்புகளோ வழங்க அனுமதிக்கப்படுவீர்கள் என்றோ எதிர்பார்க் காதீர்கள்.

பயிற்சி அறிவிப்பாளர்கள் வான் அலையில் முதன் முதலாக அரங்கேற்றப்படும் போது அவர்களுக்கு பெரும்பாலும் வழங்கப்படுவது. (பல தசாப்தங்களுக்கு முன் எனக்கு வழங்கப்பட்டது) Continuity Announcement எனப்படும் ‘தொடர் அறிவிப்பு’ அஃதாவது: ஒரு நிகழ்ச்சி முடிந்து மறுநிகழ்ச்சி ஆரம்பிக்கும்போது, முடிந்த நிகழ்ச்சியை அறிவித்து, பின்னர் நிலையத்தின் பெயர் - ஒலிபரப்பு, இப்போதைய நேரம் ஆகியவற்றையும் கூறி, அடுத்த நிகழ்ச்சிகளையும் அறிமுகப்படுத்தும் அறிவிப்பே, தொடர் அறிவிப்பு எனப்படும். பயிற்சி அறிவிப்பாளர்கள் முதல் அடி எடுத்து வைத்து வானலையில் பயிற்சி பெற வழங்கப்படும் அறிவித்தல், உதாரணத்திற்கு பின்வருமாறு இருக்கலாம்:

***“...நடைபெற்றது சிறுவர் மலர் நடத்தியவர் வானொலி மாமா...”***

இது.... ஒலிபரப்பு நிலையம். நேரம் 6 மணி. இப்போது முதல் 6.30 வரை ‘விவேகச் சக்கரம்...’ தயாரித்து வழங்குபவர் சீ. விவேகானந்தன்...

இந்த அறிவிப்பை வழங்கி உங்கள் வானலை அரங்கேற்றத்தை ஆரம்பிக்கும்படி கேட்கப்படுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

***“இதென்ன மூன்றே மூன்று வரிகள் தானே. நான் ஊதித் தள்ளிவிடுவேன்...”*** என்று அலட்சியப்படுத்தாதீர்கள். எத்தனை கலைநிகழ்ச்சி மேடைகளில் நான் அறிவிப்பாளராக முழங்கியிருக்கிறேன்! இது என்ன பெரிதா? என்று தற்பெருமை கொள்ளாதீர்கள்.

*(அடுத்தவாரம் தொடரும்...)*

**விமல் சொக்கநாதன்**

## வானொலி, தொலைக்காட்சி நேயர்களுக்கு...

வானலைகளில் தவழ்ந்துவந்து வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளின் ஊடாக செவிகளுக்கு வந்துசேரும் நிகழ்ச்சிகளை கேட்டு ரசிக்கும் வடபகுதி நேயர்களின் கருத்துகளுக்கு ‘வானலை நாதம்’ பகுதி களம் அமைத்துக் கொடுக்கத் தயாராகவிருக்கிறது.

உள்நாட்டு வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் வழங்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிய கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் இந்தப் பகுதியில் பகிர்ந்துகொள்ளலாம்.

உங்கள் கடிதங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களையும் தவறாது குறிப்பிடுங்கள்.

***“வானலை நாதம்”***

***தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.***

கொட்டகையின் கோடிச் சுவரில் எழுதியிருந்த ஏழு விதிகளையும் போய்ப் பார்த்தது. பாவம், அதற்குத் தனித்தனி எழுத்துக்களைத் தவிர வேறு எதையும் படிக்க வரவில்லை. முரியலை அழைத்துவந்து விதிகளைப் படிக்கச் சொல்லிற்று. "முரியல்! நீ அந்த நாலாவது விதியைப்படி, படுக்கையில் படுத்துறங்குவது பற்றி அதில் என்ன சொல்லியிருக்கிறது'' என்றது.

மிகவும் சிரமப்பட்டு முரியல் எழுத்துக் கூட்டிப் படித்தது. 'விதி சொல்கிறது: "விரிப்பு விரித்த படுக்கையில் மிருகங்கள் படுத்து உறங்கக்கூடாது' என்று'' வாசித்தது முரியல். விரிப்புகளைப் பற்றி புரட்சி காலத்தில் விதிகளில் எதுவும் இருந்ததாக க்ளோவருக்கு ஞாபகமேயில்லை என்பது உண்மைதான். ஆனால் நாலாவது விதிதான் தெளிவாக எழுதியிருக்கிறதே! அதில் தவறு என்ன இருக்கக்கூடும்? இரண்டு வேட்டை நாய்களுடன் அந்த சமயம் எதிர்பாராத விதமாக அங்கு வந்துசேர்ந்த ஸ்க்வீலர், கொஞ்சநஞ்சம் இருந்த





சந்தேகத்தையும் தீர்த்துக்கட்டிவிட முற்பட்டது. அது சொல்லிற்று "தோழர்களே! நாங்கள் வீட்டில் படுக்கைகளில் படுத்துறங்குகிறோம் என்ற கேள்விப்பட்டீர்களா? அது உண்மைதான். ஏன் கூடாது? படுக்கைகளைப் பற்றி புரட்சி விதிகள் தடுப்பானேன்? படுத்து உறங்குமிடமெல்லாம் படுக்கைதான். ஒரு வைக்கோல் போரும், மாட்டுக் கொட்டில் அடைப்பும் படுக்கைதான். மனிதர்கள் உபயோகிக்கும் விரிப்புகளை மிருகங்களாகிய நாம் உபயோகிக்கக்கூடாது என்பதுதான் விதியின் சாரம். பண்ணை வீட்டுப் படுக்கையிலிருந்த விரிப்புகளையெல்லாம் அகற்றிவிட்டோம். கம்பளிகளை மட்டும் உபயோகிக்கிறோம். சௌகரியமான படுக்கைகள் அவை என்று நான் சொன்னால் நீங்கள் நம்பலாம்.


மூளை வேலை செய்யும் பன்றிகளாகிய எங்களுக்கு இந்த சொற்ப சௌகரியங்கள் கூட இல்லாவிட்டால் பண்ணைக் காரியங்கள் எப்படி தடையின்றி நடக்கும்? செவ்வனே நடக்கும்? அதுவும் இப்போது மிகவும் சிரமமான காலத்தில் எங்கள் மூளைக்கு வேலை அதிகரித்துக் கொண்டிருக்கிறதே தவிர, குறையவில்லை. எங்கள் தூக்கத்தைக் கெடுக்க விரும்புகிறீர்களா நீங்கள்? தோழர்களே சொல்லுங்கள். நாங்கள் சரியாகத் தூங்காமல், வேலை நேரத்தில் அயர்ந்து தூங்கிவிட்டால் என்ன ஆகும்?

ஜோன்ஸ் திரும்பி வந்துவிடுவதை நீங்கள் விரும்புகிறீர்களா என்ன? உடனே இந்த விஷயத்தில் ஒருமனதாகத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தன மிருகங்கள் எல்லாம். அதற்குப் பிறகு பன்றிகள் படுக்கைகளில் படுத்துறங்குவது பற்றி எந்த விலங்கும் எதுவும் சொல்லவில்லை. **(நாளை..)**


## வரைவோம் வாருங்கள்!



# எறும்பும் பட்டுப்பூச்சியும்



ஓர் எறும்பு உணவு தேடப் போய்க் கொண்டிருந்தது. வழியில் ஒரு பட்டுப்பூச்சிப் புழு, கூட்டிற்குள்ளிருந்து வெளியே வரும் பருவத்தில் வாலை ஆட்டிக் கொண்டிருந்தது. எறும்பு அதைப் பார்த்துப் பரிதாபம் கொண்டு, "பாவம், நான் எங்கு வேண்டுமானாலும் ஓடி ஆடித் திரிகிறேன். எவ்வளவு உயரம் வேண்டுமானாலும் ஏறுகிறேன். உன்னால் இருந்த இடத்தை விட்டு நகர முடியவில்லை. உன் கதி இப்படி இருக்கிறதே!" என்று சொல்லியது. இதைக் கேட்ட புழு ஒன்றும் பதில் சொல்லவில்லை. சில தினங்கள் கழித்து அதே வழியாக எறும்பு திரும்பவும் வந்தது பட்டுப்பூச்சியின் கூடு மட்டும் கிடந்தது. உள்ளே ஒன்றுமில்லை. புழுவின் கதி என்னவாயிற்று என்று அது திகைத்து நிற்கும்போது அழகான இறக்கையோடு பட்டுப்பூச்சி அங்கே தோன்றியது. எறும்பைப் பார்த்து, "ஏ எறும்பே, என்னைப் பார்த்து முன்னால் பரிதாபம் கொண்டாய் இப்பொழுது என்னைப் பார். எவ்வளவு உயரம் வேண்டுமானாலும் ஏற முடியுமென்று பெருமையடித்தாய். சரி! இப்பொழுது நான் பறக்கிற உயரத்திற்கு ஏறி வா பார்க்கலாம்" என்று சொல்லி கேலி செய்தது.



**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# சிறுவர் அமுதம்

## பொம்மை



பொம்மை பொம்மை
பொம்மை பார்
புதிய புதிய பொம்மை பார்
கையை வீசும் பொம்மை பார்
கண்ணைச் சிமிட்டும்
பொம்மை பார்
எனக்குக் கிடைத்த
பொம்மைதலையை ஆட்டும்
பொம்மை பார்
தாளம் போடும் பொம்மை பார்
எனக்குக் கிடைத்த
பொம்மை போல்
எதுவும் இல்லை உலகிலே

## விடுகதைகள்




1.பல பேருக்கு ஒரு குடுமி. அது என்ன?
2.மொட்டை மாடு உட்கார்ந்திருக்கிறது, மூக்கணாங்கயிறு மேய்ந்து வருகிறது. அது என்ன?
3.நெடுங்காட்டில் இரத்தத் துளி சிதறிக் கிடக்கிறது. அது என்ன?
4.நெற்றியில் கோல் பட்டு, கதறுகிறதாம் காளை. அது என்ன?
5.மூன்று பொலிஸ்காரனுக்கு ஒரு தொப்பி. அது என்ன?

விடைகள்:
1. பூடு 2. பூசணிக்கொடி
3. குன்றிமணி 4. மத்தளம்
5. பனம்பழம்


சுடோக்கு எண் 55 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | 8 | 6 | 5 | 1 | 7 | 4 | 2 |
| 1 | 6 | 4 | 2 | 7 | 9 | 8 | 5 | 3 |
| 7 | 2 | 5 | 4 | 8 | 3 | 9 | 6 | 1 |
| 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 2 | 9 | 4 |
| 2 | 5 | 9 | 1 | 4 | 8 | 3 | 7 | 6 |
| 6 | 4 | 7 | 9 | 3 | 2 | 1 | 8 | 5 |
| 4 | 8 | 6 | 3 | 2 | 7 | 5 | 1 | 9 |
| 5 | 1 | 2 | 8 | 9 | 4 | 6 | 3 | 7 |
| 9 | 7 | 3 | 5 | 1 | 6 | 4 | 2 | 8 |

சுடோக்கு எண் 56

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | | 3 | | | |
| | | 9 | | | | | 4 | 6 |
| 8 | 1 | | | | | | 5 | |
| 7 | | 6 | | 3 | | 9 | | |
| 9 | | | | 2 | | | | 5 |
| | | 1 | | 6 | | 2 | | 8 |
| | 3 | | | | | | 2 | 9 |
| 1 | 7 | | | | | 4 | | |
| | | | 3 | | 8 | | | |

# இவர்தான் கிழக்கு மாகாண முதலமைச்சர்



கிழக்கு மாகாண முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள நஜீப் அப்துல் மஜீத், 1957ஆம் ஆண்டு கிண்ணியாவில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை கிண்ணியா மத்திய கல்லூரியிலும், பின்னர் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி, கம்பளி ஸாஹிராக் கல்லூரி என்பவற்றில் கற்றார். மூதூர் மஜீத் என அழைக்கப்படும் முன்னாள் அமைச்சர் அப்துல் மஜீத் 1987ல் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து இவர் தந்தை வழியில் அரசியலில் குதித்தார். 1989ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளராக போட்டியிட்ட போதும் அவரால் பாராளுமன்றத்துக்கு தெரிவாக முடியவில்லை. 1993 ல் நடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டு வென்ற அவர் கிண்ணியா பிரதேச சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

பாடசாலைக் காலத்தில் சிறந்த விளையாட்டு வீரராகத் திறமை காட்டிய இவர் மத்திய மாகாண பரிதிவட்ட சம்பியனாகவும் விளங்கினார். மெய்வல்லுநர் போட்டிகளிலும் றகர் போட்டிகளிலும் கூட திறமை காட்டியமை குறிப்பிடத்தக்கது.

1994 பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸினூடாகப் போட்டியிட்டு முதற் தடவையாக நஜீப் ஏ மஜீத் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். இரண்டாயிரமாம் ஆண்டு பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டு மீண்டும் பாராளுமன்றம் தெரிவானார். இவர் 2000 முதல் 2001 வரை தபால் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சராகப் பணிபுரிந்தார். 2004 ஆம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வென்ற அவர், திருமலை மாவட்ட அபிவிருத்தி அமைச்சராகவும் பின்னர் கூட்டுறவு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராகவும் பிரதி மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சராகவும் நியமிக்கப்பட் டார்.

மூதூர் சுதந்திரக்கட்சி அமைப்பாளராகவும் திருமலை மாவட்ட ஜனாதிபதியின் இணைப்பாளராகவும் செயற்பட்டு வரும் இவர், கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேச மக்களின் நலனுக்காக பெரும் பங்காற்றியுள்ளார்.

கிண்ணியா பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்தவும் புதிதாக முஸ்லிம் பாடசாலைகளை உருவாக்கவும் பங்காற்றியுள்ள இவர், கிண்ணியா பாலம் நிர்மாணிக்கப்படவும் முன்னின்று செயற்பட்டுள்ளாரென்பது குறிப்பி டத்தக்கது.

கிண்ணியாவைத் தனியாக கல்வி வலயமாக மாற்றவும் இவர் பாடுபட்டதோடு கிண்ணியா பிரதேச ஆஸ்பத்திரியை தளவைத்தியசாலையாக மாற்றுவதற்கும் முன்நின்று உழைத்தார்.

2012 கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருமலை மாவட்டத்தில் ஐ.ம.சு. முன்னணி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்

# ஐ.நா.மனித உரிமை அதிகாரிகள் கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களில்

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விஜயம் செய்தனர்.

ஆசிய பசுபிக், மத்திய கிழக்கு, வட அமெரிக்க பொறுப்பாளர் ஹன்னி மெகாலி மற்றும் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகத் தெரிவுகளுக்கான மனித உரிமைகள் அதிகாரி ஒஸ்கார் சொலேரா ஆகியோரே இந்த மாவட்டங்களுக்கு விஜயம் செய்தனர்.

நேற்று முன்தினம் முற்பகல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனைச் சந்தித்த இவர்கள், கிளிநொச்சி மாவட்டத்தின் நிலைமை குறித்துக் கலந்துரையாடியிருந்தனர். கிளிநொச்சி மாவடடத்தின் மீள் குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல், அபிவிருத்தி, சட்ட அமுலாக்கல், மக்களின் வாழ்க்கைத்தரம் குறித்து ஐ.நா. பிரதிநிதிகள் கேட்டறிந்து கொண்டதாகவும், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து அவர்கள் திருப்தி தெரிவித்ததாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியிலிருந்து ஐ.நா. பிரதிநிதிகள் முல்லைத்தீவுக்குச் சென்று அரசாங்க அதிபர் வேதநாயகத்தை மாவட்ட செயலகத்தில் சந்தித்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் மீள் குடியேற்றம், அபிவிருத்தி, உட்கட்டுமான நிர்மாணப் பணிகள், கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் குறித்து இவர்களுக்கு அரசாங்க அதிபர் விளக்கமளித்தார்.

இதன்பின்னர் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பகுதிகளுக்கும் ஐ.நா. பிரதிநிதிகள் நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் வேதநாயகன் தெரிவித்தார்.

# மாதமொரு மகிழ்வான மாலைப் பொழுது

நாடகம் என்பது சமூக அசைவியக்கத்தின் வெளிப்பாடு என்பதுடன் பல்துறைபரிமாண ஆற்றலும் கொண்டது. இது பேசு பொருட்களிற்கு ஏற்ற வகையில் தமக்கான வடிவங்களினை தர நிர்ணயம் செய்து கொள்கின்றது.

நாடக நிகழ்த்துகைகளுக்கான கள வெளிகளாக விழாக்கள் அமைகின்றன எனின் மிகையில்லை. இந்த வகையில் அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டத்தினர் 'மாதமொரு மகிழ்வான மாலைப் பொழுது' எனும் தொனிப் பொருளில் பௌர்ணமி தினத்தன்று கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றனர்.

இக்கலை நிகழ்வுகளினது பெறுமானம் இளைஞர்களது செயற்பாடுகளிற்கு ஊக்குவித்தல், இலைமறை காயாக உள்ள கலைஞர்களினை வெளியுலகிற்கு கொண்டு வருதல், கலை தொடர்பான ரசனை உணர்வினை ஏற்படுத்தல் என பல்பரிமாண நோக்கு நிலையில் அமைந்திருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இதன் அடிப்படையில் மகாஜன சபை மண்டப வளாகத்தில் கடந்த பௌர்ணமி நாளன்று சைவப் பெரியார் அமரர் செல்லப்பா மயில்வாகனத்தின் உருவச் சிலை திறப்பு, சிறுவர் பூங்கா திறப்பு விழா, 'இதுவும் ஒரு கதை' எனும் சிறுகதை தொகுப்பு நூல் வெளியீடு என்பன இடம் பெற்றன.

இந்நிகழ்வின் சிறப்பு அங்கமாக இடம்பெற்ற கலை நிகழ்வுகளில் சங்கீத பூஷணம் வி.கே. நடராஜனின் நெறிப்படுத்தலில் அளவை இசைக்கலை மன்ற மாணவர்களது கூட்டிசை அரங்கம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. செல்வி சுகர்யா, சிவபாலன், செல்வி சுதர்மா, சிவபாலன் ஆகிய சகோதரிகளினால் நாட்டார் இசை நிகழ்ச்சி நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வின் மற்றுமொரு அம்சமாக மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் நடிப்பில் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி. அருள்குமரனின் எழுத்துரு - நெறியாழ்கையில் "மாய வலை" எனும் சமூக குறியீட்டு நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இந்த நாடகத்தின் ஊடாக சமூகத்தில் இளைய தலைமுறையினர் சரியான வழிப்படுத்தல்கள் இன்றி காணப்படும் போது அவர்கள் தான்தோன்றித்தனமான வகையில் தமக்கு சரியானது எனும் அடிப்படையில் தீய வழிமுறைகளினை கடைப்பிடிப்பதினால் ஏற்படும் சமூகவியல் பாதிப்புக்கள் நடப்பியல் பிரச்சினைகளாக்கப்பட்டு குறியீட்டு தன்மையுடன் நிகழ்த்தப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

இந்நாடகத்தில் பாகமாடிகளாக யூட்ஷகான், தனிஸ்ரன், சன்ராஜ், டில்ஷான், கார்த்தீபன், மயூரன், திலக்ஷன் ஆகியோர் செயற்பட்டனர். இவ் நாடகத்திற்கான பின்னணி இசையமைப்பை கல்லூரியின் ஆசிரியர் திருமதி. கே. வசீகரன் மேற்கொண்டார். ஒன்பதாம் தரத்தில் பயிலும் மாணவன் அகிலன் டொல்கி இசையினை வழங்கியிருந்தார்.

இந்த மாலைப்பொழுது பார்வையாளர்களுக்கு உண்மையிலேயே மகிழ்வாக இருந்தது என்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

- *விவேகன்*

# 'மலரும் இலங்கை' லண்டனில் புகைப்படக் கண்காட்சி

"மலரும்இலங்கையில்" (Bloom In Srilanka) என்ற தொனிப் பொருளில் இலங்கையின் புகைப் படக் கண்காட்சி ஒன்று லண்டன் நகரில் இன்று ஆரம்பாகிறது. இன்று காலை 9.30மணி முதல் இரவு 9.30மணி வரை லண்டனிலுள்ள இலங்கை தூதரகத்தில் நடைபெறவுள்ளது.


அவ்வாறே, நாளை 20ஆம் திகதி லண்டன் பர்மின்ஹேம் நகரில் நடைபெறும் இதே புகைப் படக்கண்காட்சியை லண்டனிலுள்ள இலங்கையர்கள் பார்வையிடலாம் என அறிவிக்கப்படுகிறது.

மூன்று தசாப்தங்களாக இலங்கையில் நடைபெற்ற கொடிய யுத்தம், பயங்கரவாத யுத்தத்தின் படிப்பினைகள், யுத்தப் பிரதேத்தில் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகள் , விடுதலைப் புலிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகள், ஐரோப்பிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் இலங்கைக்கு எதிரான பொய் பிரசாரங்களை முறியடிக்கும் வகையில் வடக்கு -கிழக்கு பகுதிகளில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றை சித்தரிக்கும் புகைப்படங்களும் இலங்கையின் எழில்கொஞ்சும் இயற்கைக்காட்சிகளை உள்ளடக்கிய புகைப்படங்களும் இந்தக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன.

# ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இன்றைய தெய்வீகப் பேருரை

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தையொட்டி தினந்தோறும் மாலை 7.30 மணி முதல் தேவஸ்தான மண்டபத்தில் யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் தெய்வீகப் பேருரை இடம்பெற்று வருகிறது.

மகோற்சவத்தின் நான்காவது நாளாகிய இன்று (வியாழக்கிழமை) நாக தமிழிந்திரன் "அனுமனின் நுண்ணறிவு" என்ற பொருளில் பேருரையாற்றுகிறார். (க)



சங்கானையில் அமைந்துள்ள சேலை வடிவமைப்பு நிலையத்தில் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு சுய தொழில் செய்வதற்கான திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரின் ஏற்பாட்டில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

# மீன்பிடியில் தடை செய்யப்பட்ட உபகரணங்கள் பாதுகாப்பு தரப்பினர் அசமந்தம்

**- அமைச்சர் ராஜித சேனாரத்ன**

இலங்கைக் கடபற்பரப்பில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அதிகரித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சு முறைப்படுகிறது.

தடை செய்யப்பட்ட உபகரணங்களின் பாவனையைத் தடுத்து நிறுத்துவதற்கு பாதுகாப்பு பிரிவினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார். பாதுகாப்பு செயலாளருடன் இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

திருகோணமலை, புல்மோட்டை போன்ற பிரதேசங்களில் இவ்வாறான சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக கடற்றொழில் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் மீன்பிடி அமைப்புக்களின் தலைவர்கள் தமக்கு அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் ராஜிதசேனாரத்ன குறிப்பிட்டார்.

# எங்களைத் தாக்கினால் நாம் இஸ்ரேலை தரைமட்டமாக்குவோம்

## ஈரான் பகிரங்க எச்சரிக்கை

ஈரானின் அணு ஆயுத தயாரிப்பு மையங்கள் மீது தாக்குதல் நடந்தால், நாங்கள் கொடுக்கும் பதிலடியில் இஸ்ரேலில் எதுவுமே மிஞ்சியிருக்காது என்று ஈரான் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானையொட்டிய வளைகுடா கடற்பரப்பில் அமெரிக்காவும், அதன் நேச நாடுகளும் மிகப் பெரிய போர் ஒத்திகையை மேற்கொள்ள உள்ளன. இதற்கான பல்வேறு நாடுகளின் போர்க்கப்பல்கள் வளைகுடா கடற்பரப்பில் முகாமிட்டு வருகின்றன. இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில் ஈரான் ராணுவ தளபதி முகமது ஜபாரி டெஹ்ரானில் செய்தியாளர்களிடம் கூறியதாவது, எங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் எப்படி



பதிலடி கொடுப்பது என்பதில் தெளிவாக இருக்கிறோம். நிச்சயமாக சொல்கிறோம்.. இஸ்ரேலில் எதுவுமே மிச்சமிருக்காது.

அமெரிக்கா எங்கள் மீது போர் தொடுக்குமேயானால் மேற்குலக நாடுகளும், அமெரிக்காவும் ஒரு பக்கமும் நாங்கள் ஒருபக்கமுமாக நிற்போம். இது இயற்கையானது. அதேபோல் போர் நடைபெறும் போது ஹோர்முஸ் ஜலசந்தி மூடப்படுவதுவம் இயல்பான ஒன்றானதுதான்.

லெபனானில் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் ஏற்கெனவே இஸ்ரேலை இலக்கு வைத்து 40 ஆயிரம் ஏவுகணைகளை நிறுத்தியுள்ளனர். எங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் அந்நாடு மீது தாக்குதல் நடத்துமாறு ஹிஸ்புல்லா அமைப்பை கேட்டுக் கொள்வோம். அப்புறம் இஸ்ரேலில் எதுவுமே எஞ்சியிருக்காது என்றார்.

ஈரான் தரப்பிலிருந்து இதுவரை இப்படி விரிவாக பதிலடித் தாக்குதல் பற்றி பேசுவது இதுவே முதல்முறை என்பதால் அந்தப் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

# உலக பார்வை

# கேட்டின் அரை நிர்வாண படங்களை வெளியிட தடை

## பிரான்ஸ் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

பிரிட்டன் இளவரசர் வில்லியமின் மனைவி கேத் மிடில்டனின் அரை நிர்வாண புகைப்படங்களை திருப்பி கொடுக்க வேண்டும் என பிரான்ஸ் நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

இளவரசர் வில்லியமும், மனைவி கேட் மிடில்டனும் பிரான்ஸ், இத்தாலி மற்றும் தென் கிழக்கு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து வருகிறார்கள்.

அவர்கள் பிரான்ஸில் விடுமுறையைக் கழிக்க வந்திருந்த போது, கேட் மிடில்டன் டொப்லெஸ்ஸாக இருந்ததை இரகசியமாக படம் பிடித்து விட்டனர்.

இந்தப் படங்களை பிரான்ஸைச் சேர்ந்த குளோசர் என்ற பத்திரிக்கை முதலில் வெளியிட்டது. இதையடுத்து இத்தாலியைச் சேர்ந்த சி என்ற பத்திரிக்கை ஸ்பெஷல் எடிஷனே வெளியிடப் போவதாக அறிவித்தது. மொத்தம் 50 படங்களை பிரசுரிக்கப் போவதாகவும் அது கூறியிருந்தது.

இந்த நிலையில் குளோசர் பத்திரிக்கைக்கு எதிராக பாரீஸ் நீதிமன்றத்தில் வில்லியம், கேட் மிடில்டன் சார்பில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த பரீஸ் நீதிமன்றம், தற்போது குளோசர் பத்திரிகைக்கு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவின் சில முக்கிய அம்சங்கள்.

இனிமேல் ஒரு படத்தைக் கூட குளோசர் பத்திரிக்கை பிரசுரிக்கக் கூடாது.

தன்னிடமிருக்கும் கேட் மிடில்டனின் டொப்லெஸ் படங்கள் மற்றும் அது அடங்கிய பத்திரிக்கை நகல்களை 24 மணி நேரத்தில் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

-இந்தப் பத்திரிக்கை இப்படிப் பட்ட செயலில் ஈடுபட்டதற்காக எப்படிப்பட்ட விசாரணை நடத்த வேண்டும் என்பதை காவல் துறையே சுயேச்சையாக தீர்மானித்து தொடர்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

படங்களை வெளியிட்டதில் கேட் மிடில்டனின் தனிமை உரிமையை இந்தப் பத்திரிக்கை மீறியிருப்பது தெரியவந்தால் தனியாகவும் நடவடிக்கை எடுக்கலாம்.

இந்த உத்தரவுகளை குளோசர் பத்திரிக்கை மீறினால் ஒவ்வொரு விதிமீறலுக்கும் அது 10,000 யூரோவை அபராதமாகக் கட்ட வேண்டும்.

கேட் மிடில்டனின் படங்களை குளோசர் பத்திரிக்கையின் பப்ளிசர் யாருக்காவது வீற்றிருந்தால் அவருக்கு 80,720 பவுண் அபராதம் விதிக்கப்படும் என்று உத்தரவில் அதிரடியாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வில்லியமும், கேட் மிடில்டனும் தற்போது உலகின் 4ஆவது குட்டி நாடு என்ற பெருமையைப் பெற்ற சின்னஞ் சிறிய தீவான தூவலு தீவுக்கு விடுமுறையைக் கழிக்க வந்துள்ளனர். இத்துடன் தங்களது சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு அவர்கள் லண்டன் திரும்பவுள்ளனர்.

# மெக்சிகோ சிறையிலிருந்து 132 கைதிகள் அமெரிக்காவிற்குத் தப்பி ஓட்டம்

மெக்சிகோ சிறையில் இருந்து 132 கைதிகள் சுரங்கம் தோண்டித் அதன் வழியாக சிறையிலிருந்து தப்பியோடி உள்ளனர்.

அவர்கள் அண்டை நாடான அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. மெக்சிகோ-அமெரிக்க எல்லையை ஒட்டிய நகரம் பீட்ராஸ் நெக்ராஸ்.

இங்குள்ள சிறையில் நூற்றுக் கணக்கான கைதிகள் அடைக்கப் பட்டு உள்ளனர். நேற்று காலை சிறை வார்டன் வழக்கமான சோதனை மேற்கொண்ட போது 132 கைதிகள் இல்லாதது கண்டு பிடிக்கப்பட்டது.



இதையடுத்து நடந்த தீவிர விசாரணையில் சிறையில் இருந்து சுரங்கம் தோண்டித் தப்பியோடியது தெரியவந்துள்ளது. கைதிகள் தோண்டிய சுரங்கத்தின் நீளம்-23 அடி, ஆழம்-9.5 அடி, அகலம்-4 அடி.

இவர்கள் கனகச்சிதமாக திட்டம் போட்டு பல நாட்களாக வெளியே சத்தம் கேட்காத வண்ணம், தூங்கும் நேரத்தில் சுரங்கம் தோண்டி இருந்ததைப் பார்த்து வார்டனே அதிர்ச்சியடைந்துள்ளார்

சுரங்கம் முடியும் இடத்தில் இருந்த வேலியை வெட்டி விட்டு அனைவரும் பத்திரமாக வெளியே ஓட்டம் பிடித்துள்ளனர். சிறை இருந்த இடத்துக்கு மிக அருகில் அமெரிக்க எல்லைப் பகுதி இருந்தது அவர்களுக்குச் சாதகமாக அமைந்து விட்டது. அவர்கள் அனைவரும் அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

# ஆப்கானில் முதல் முறையாக மனித வெடிகுண்டு தாக்குதல் நடத்திய பெண்

ஆப்கானில் பெண் ஒருவர் மனித வெடிகுண்டு தாக்குதல் நடத்தியதில் 12 பேர் பலியாகி-னர். அமெரிக்காவுக்கு எதிராக நடத்தப்பட்ட இத்தாக்குதலில் உயிரிழந்தோரில் ஏழு பேர் வெளிநாட்டவர்கள். அமெரிக்காவில் உலக வர்த்தக மைய கட்டடத்தின் மீது விமானங்களை மோதச் செய்து தரைமட்டமாக்கப்பட்ட சம்பவத்தை நினைவுகூரும் வகையில், கடந்த 11ஆம் திகதி பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

அப்போது முஸ்லிம் மத தலைவரை கேலி செய்யும் வகையில், வீடியோ படம் வெளியானது. இதையடுத்து பல்வேறு முஸ்லிம் நாடுகளில் கலவரம் வெடித்தது. எகிப்தில் ஆரம்பித்த இக்கலவரம் பின் லிபியா, ஆப்கன், துனிசியா என பல நாடுகளில் பரவியது. லிபியாவில் நடந்த கலவரத்தில் அமெரிக்கத் தூதர் உட்பட நான்கு பேர் பலியாகினர்.

இந்நிலையில் சர்ச்சைக்குரிய வீடியோ படத்தைக் கண்டித்து, ஆப்கான் தலைநகர் காபூலில் விமான நிலையம் அருகே நேற்று பெண் ஒருவர் மனித வெடிகுண்டு தாக்குதல் நடத்தினார்.

இத்தாக்குதலில் ரஷ்ய, தென் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த,

## 12 பேர் பலி

ஏழு பேரும், மேலும் ஐந்து பேரும் பலியாகினர். சர்வதேச கூரியர் கம்பெனியில் வேலை செய்த, ரஷ்ய பெண், தென்னாபிரிக்க நாடுகளைச் சேர்ந்த பைலட்டுகள் மற்றும் ஊழியர்களை ஏற்றிச் சென்ற வேன், எரிபொருள் நிரப்ப நின்ற போது இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. தாக்குதலுக்கு ஹெஸ்பி இஸ்லாமி என்ற இயக்கம் பொறுப்பேற்றது. காபூலில் பெண்ணை கொண்டு நடத்தப்பட்ட முதல் தற்கொலைப் படைத்தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்காவிற்குச் சென்றுள்ள மியான்மர் எதிர்கட்சி தலைவர் ஆங்சாங் சூகி வொஷிங்டனில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டனை சந்தித்துப் பேசினார்.

# சுறாவால் உயிர் தப்பிய பொலிசார்

பசிபிக் கடலில் மீன் பிடிக்கச் சென்று வழி தவறி 15 வாரங்கள் கடலிலேயே தத்தளித்த பிரிட்டன் பொலிஸ்காரர், சுறா மீன் உதவியால் கரை திரும்பியதாக தெரிவித்துள்ளார்.

பிரிட்டனைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி டோவ்காய் டெய்டோ 42, தன் உறவினர் லெலு பைலலி உடன், பசிபிக் பெருங்கடலில் கில்பர்ட் எலிஸ் தீவில் உள்ள தரவா பகுதிக்கு, படகில் மீன் பிடிக்கச் சென்றார்.

மெயினா தீவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, படகில் எரிபொருள் தீர்ந்து விட்டது. எனவே, இருவரும் படகிலேயே படுத்துத் தூங்கினர்.

லெலு பைலலி மூச்சுத் திணறலில் இறந்தார். இதையடுத்து, டோவ்காய் மட்டும் 15 வாரங்களாக படகிலேயே கிடந்தார். சமீபத்தில் அவரை மீனவர்கள் காப்பாற்றினர்.

உயிர் பிழைத்தது குறித்து டோவ்காய் கூறுகையில், எரிபொருள் தீர்ந்த பின், என் உறவினர் உயிர் வாழ்வோம் என்ற நம்பிக்கையை இழந்து விட்டார். சில வாரங்களுக்கு முன் அவர், மூச்சுத் திணறி இறந்தார்.

ஒருநாள் காலை படகில் தூங்கிக் கொண்டிருந்தபோது, ஒரு பெரிய உருவம் படகை உலுக்கியது. விழித்து பார்த்தபோது, படகின் ஒரு முனையை சுறா மீன் உலுக்கிக் கொண்டிருந்தது.

பின், அந்த வழியாக ஒரு மீனவப் படகு வருவதைப் பார்த்ததும் கத்தினேன். அவர்கள் என்னை வந்து காப்பாற்றிச் சென்றனர். அந்த சுறா மீன் மட்டும் படகை உலுக்காமல் இருந்திருந்தால், நான் தூங்கிக் கொண்டிருப்பேன். ஒரு வகையில் பார்த்தால் சுறா மீன் தான் என்னைக் காப்பாற்றி உள்ளது என உயிர் பிழைத்த பொலிசார் தெரிவித்தள்ளார்.

# ஜேர்மனியில் இளைஞர்கள் மது அருந்துவது அதிகரிப்பு

ஜேர்மனியில் பதின்வயதினரிடையே குடிப்பழக்கம் அதிகமாக இருப்பதாக சுகாதார மேம்பாட்டு துறை நடத்திய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

மாதத்திற்கு ஒரு முறை 70,000 பேர் குடிக்கின்றனர். மாதத்திற்கு ஐந்து முறையோ அதை விட கூடுதலாகவோ 15 சதவிகிதம் பேர் குடிக்கின்றனர்.

ஆனால் சுகாதார மேம்பாட்டு துறையின் இயக்குனரான எலிசபெத் கூறுகையில், கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு பதின்வயதினரிடையே குடிப்பழக்கம் 22.6 சதவிகிதமாக இருந்ததாகவும், தற்போது பிரசாரங்கள் மூலம் இந்த சதவிகிதம் 20.4 ஆக குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜேர்மனியில் அதிகமாக பயன்படுத்தும் போதைப்பொருள் மதுவாக இருப்பதால் இளைஞர்கள் அதிகமாக அதனையே நாடுகின்றனர்.

இந்நிலையில் இளம்பெண்களிடம் ஆபத்தான குடிப்பழக்கம் இரட்டிப்பாக அதிகரித்து வருகிறது. 18 முதல் 25 வயதினரிடம் இந்த ஆபத்தான குடிப்பழக்கம் 50 சதவிகிதத்துக்கும் அதிகமாக உள்ளது.

# நாட்டை விற்க முயல்வதாக காங்கிரஸ் மீது குற்றச்சாட்டு

- மம்தா

இதுவரை தனது கோரிக்கை நிறைவேறாததால் மத்திய அரசுக்கான ஆதரவை வாபஸ் பெற்றுக் கொள்வதாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை தங்கள் கட்சி சார்பில் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள அமைச்சர்கள் ராஜினாமா செய்வார்கள் எனவும் கூறினார். மேலும் அவர், நாட்டை விற்க ஐ.மு., கூட்டணி முயற்சி செய்வதாக மம்தா கூறியுள்ளார்.

**மம்தா கெடு:**

கடந்த சில நாட்களுக்கு முன்னர் டீசல் விலை லீற்றருக்கு 5 ரூபாய் உயர்த்தப்பட்டது. காஸ் சிலிண்டர்கள் மீதும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

ஆண்டுக்கு 6 சமையல் காஸ் சிலிண்டர்கள் மட்டுமே இனி மானிய விலையில் வழங்கப்படும் என அறிவித்தது. அத்துடன் சில்லரை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டிற்கும் அனுமதி வழங்கியது.

இதனால் அதிருப்தியடைந்த மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, இந்த மூன்று முடிவுகளையும் வாபஸ் பெற வேண்டும் என எச்சரிக்கை விடுத்தார்.

இல் லையென்றால் கடுமையான முடிவு எடுக்க வேண்டியிருக்கும் என எச்சரிக்கை விடுத்தார்.

இந்த கெடு நேற்றுடன் முடிவடைந்தது. ஆனால் மத்திய அரசிடமிருந்து இதுவரை எந்த ஒரு சாதகமான முடிவும் வரவில்லை.

இதனையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து திரிணமுல் காங்கிரஸ் கட்சியின் எம்.பி.,க்கள் கூட்டம் கோல்கட்டாவில் நடந்தது.

**ஆதரவு வாபஸ்:**

இந்த கூட்டத்திற்கு பின்னர் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்த மம்தா பானர்ஜி, ஐ.மு., கூட்டணியில் குறைந்தளவு மரியாதை கூட எங்களுக்கு அளிக்கப் படவில்லை.

மத்திய அரசு முடி வெடுக்கும் முன்னர் எங்களிடம் ஆலோசனை நடத்தவில்லை.

குறைந்தளவு விலை குறைப்பு என்பதை ஏற்றுக்கொள்ள முடி யாது.

சில்லரை வர்த்தகத்தில் நேரடி அன்னிய முதலீடு இந்தி யாவில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

மத்திய அரசுக்கு அளித்து வரும் வாபஸ் பெற்றுக்கொள்கிறோம். வெள்ளிக்கிழமை எங்களது அமைச்சர்கள் ராஜினாமா செய்வார்கள். மக்களை பாதிக்கும் செயல்களை காங்கிரஸ் தன்னிச்சையாக செய்துள்ளது.

நாட்டை விற்க முயற்சி:

ஓய்வூதிய மசோதா ஆரம்பநிலையிலேயே எதிர்த்தோம். காங்கிரஸ் மிரட்டும் பாணியை கடை-பிடித்தது. சில சமயங்களில் கீழ் பணிய வேண்டிய நிலை ஏற்பட்டது. நாட்டை விற்க ஐ.மு., கூட்டணி முயற்சி செய்கிறது. இதனை நாட்டை நாங்கள் எதிர்த்தோம் என கூறினார்.

# இந்திய செய்திகள்

## பிரணாப் முகர்ஜியிடம் கசாப் கருணை மனு



மும்பை தாக்குதல் வழக்கில் தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்ட அஜ்மல் கசாப், தனது தண்டனையை குறைக்கக்கோரி ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம் மனு தாக்கல் செய்துள்ளார்.

மும்பையில் (2008) நடந்த தீவிரவாத தாக்குதலில் ஈடுபட்டு அநியாயமாக பொதுமக்களை கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்ற பயங்கரவாதி அஜ்மல் கசாப்புக்கு சென்ற வருடம் ஒக்ரோபர் மாதம் மும்பை நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்தது.

இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அஜ்மல் மேல் முறையீடு செய்தான்.

சமீப தினங்களுக்கு முன்பு விசாரித்த உச்ச நீதிமன்றம் கசாப்பிற்கு வழங்கப்பட்ட தூக்கு தண்டனையை உறுதி செய்தது.

இந்நிலையில் தனக்கு விதிக கப்பட்ட தூக்கு தண்டனையை தளர்த்தக் கோரி கசாப் சார்பில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு கருணை மனு இன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# உலகின் அதிவேக கணனி விரைவில் இந்தியாவில்

உலகின் அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர் இந்தியா சார்பில் வரும் 2017ம் ஆண்டுக்குள் உருவாக்கப்படும் என மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. சாதாரண கம்ப் யூட்டர்களை விட, பல மடங்கு வேகமான செயல்திறன் கொண்டதாகவும், கடினமான கணக்குகளையும் வினாடிகளில் செய்யும் திறன் கொண்ட கம்ப்யூட்டர்கள் சூப்பர் கம்ப்யூட்டர் என அழைக்கப்படுகிறது. இவ்வகை கம்ப்யூட்டர்கள் ராணுவம், விண்வெளி, ஆராய்ச்சிக்கூடம் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறது. உலகில் முதன் முதலாக சூப்பர் கம்ப்யூட்டர் 1960களில் அறிமுகமானது. இந்தியா திட்டமிட்டுள்ள இந்த சூப்பர் கம்ப்யூட்டர், தற்போது உள்ள அதிவேக சூப்பர் கம்ப்யூட்டரான ஐ.பி.எம்., ன் "செகுயா" வை விட 61 மடங்கு வேகமானதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான செலவு 4,700 கோடி ‘ரூபாய்.திட்டமிடப்பட்டுள்ள காலம் 5 ஆண்டுகள்.

**வேகம் என்ன**

petaflop என்பது கம்ப்யூட்டரின் வேகத்தை குறிக்கிறது. ஒரு நவயகடழிஒரு வினாடிக்கு ஆயிரம் டிரில்லியன் வேகத்தில் செயல்படும் திறன் கொண்டது. ஒரு டிரில்லியன்க்கு, 1க்கு அருகில் 18 ஜீரோக்களை சேர்க்க வேண்டும்.

அப்படியென்றால் இதன் வேகம் எவ்வளவு இருக்கும் என்பதை தீர்மானித்துக் கொள்ளு ங்கள். 2012ம் ஆண்டின் உலகின் அதிவேக சூப்பர் கம்ப்யூட்டராக தேர்வு செய்யப்பட்ட ஐ.பி.எம்., நிறுவனம் தயாரித்த "செகுயா" என்ற சூப்பர் கம்ப்யூட்டரின் வேகம் 16.32 petaflop அதாவது 7.8 லட்சம் அதி வேகமான லேப்டாப் கம்ப்யூட்டர்களை ஒன்றிணைப்பதற்கு சமம். ஆனால் மத்திய அரசு திட்டமிட்டுள்ள சூப்பர் கம்ப்யூட்டரின் வேகம், இந்த ஐ.பி.எம்., கம்ப்யூட்டரின் வேகத்தை விட 61 மடங்கு அதிகமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர்களின் வரிசையில், இந்தியா தற்போது 58வது இடத்தில் உள்ளது.

# 2013ம் ஆண்டில் செவ்வாய் கிரகத்திற்கு சந்திராயன் ஹெரிடேஜ் பயணம்: இஸ்ரோ

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ, 2013 நவம்பர் மாதமளவில் செவ்வாய் கிரகத்திற்கு விண்கலத்தை அனுப்ப உள்ளதாக இஸ்ரோ அமைப்பின் தலைவர் ராதாகிரு'ணன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரோ மூலமாக வானில் ஏவப்படும் விண்கலங்களை PSLV-ஓடு ரொக்கெட்டே இது வரை சுமந்து சென்றிருக்கிறது.

இந்நிலையில் செவ்வாய் கிரகத்திற்கு பயணிக்கும் இந்த விண்கலத்தையும் இந்த ரொக்கெட்டை சுமந்து செல்லும் என கூறப்படுகின்றது.

மேலும், செவ்வாய்க்கு அனுப்ப தற்போது சுமார் 1315 கிலோ எடை கொண்டதாக தயாரிக்கப்பட்டு வரும் இந்திய விண்கலத்திற்கு, சந்திராயன் ஹெரிடேஜ்" என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டால் சுமார் 300 நாட்களுக்கு பின்னர் செவ்வாயை சென்றடையும்.

சுமார் 50 x 80,000 கி.மீ கொண்ட செவ்வாயின் ‘சுற்றுவட்டப்பாதையில் இந்த விண்கலம் நிறுத்தப்படும் என்று ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

மேலும் 25 கிலோ எடைகொண்ட அறிவியல் ஆராய்ச்சி சாதனங்கள், கருவிகளையும் அது எடுத்துச்செல்லவுள்ளது.

எனினும் 2017ம் ஆண்டுக்கு முன்பு, விண்கலங்களில் மனிதர்களை அனுப்பும் திட்டம் இல்லை எனவும் இஸ்ரோவின் தலைவர் ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

# ஆதரவுக் கட்சிகள் மீது நம்பிக்கை வைப்பது காங்கிரஸின் ரத்தத்திலேயே கிடையாது

பா.ஜ.க விமர்சனம்



ஆதரவுக் கட்சிகளுடன் ஆலோசனை நடத்துவது, அவர்கள் மீது நம்பிக்கை வைப்பது காங்கிரஸின் ரத்தத்திலேயே கிடையாது என்று பாஜக விமர்சித்துள்ளது.

டீசல் விலை உயர்வு, சில்லரை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீடு, மானிய விலையில் காஸ் சிலிண்டர்கள் விநியோக ரத்து போன்றவற்றை மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சி கொண்டு வந்துள்ளது.

எனவே மத்திய அரசுக்குக் கொடுத்து வரும் ஆதரவைத் திரும்பப் பெறுவதாக திரிணமூல் கட்சி தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் ரவி சங்கர் பிரசாத், ஆதரவுக் கட்சிகளுடன் ஆலோசனை நடத்துவது, அவர்கள் மீது நம்பிக்கை வைப்பது என்பது காங்கிரஸின் ரத்தத்திலேயே கிடையாது.

நாங்கள் ஆளுவோம் பிறர் எங்களைப் பின்பற்ற வேண்டும் எனும் ஆணவப் போக்குதான் அக்கட்சியின் மிகப்பெரும் அறிவீனம்.

நாட்டின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு மம்தா பானர்ஜி ஆதரவை வாபஸ் பெறும் துணிசசலான முடிவை எடுத்துள்ளார்.

அதற்காக நாம் அவரைப் பாராட்ட வேண்டும். இந்த முடிவானது மத்திய அரசின் ஸ்திரத் தன்மையைக் கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது. மத்தியில் இப்போது வெறும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிதான் உள்ளது. இதனால் மத்திய அரசின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது.

இந்நிலையில், நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத் தொடரைக் கூட்ட வேண்டுமா என்பது குறித்து தேசிய ஜனநாயக கூட்டணியின் பிற கட்சிகளுடன் கலந்து ஆலோசித்து முடிவெடுப்போம் என்றார்.

# வீடு எங்கும் வளம் பெருகட்டும்: முதல்வரின் விநாயகர் சதுர்த்தி வாழ்த்து



விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நாடு முழுவதும் நலமும், வீடு எங்கும் வளமும் பெருகட்டும் என்று முதல்வர் ஜெயலலிதா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜெயலலிதா வெளியிட்ட வாழ்த்துச் செய்தி வேழ முகத்து விநாயகரைத் தொழ வாழ்வு மிகுந்து வரும் என்ற வாக்கிற்கு ஏற்ப முழு முதற் கடவுளாக விளங்கும் விநாயகரின் திரு அவதாரத் திருநாளான விநாயகர் சதுர்த்தியை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் அனைவருக்கும் உளம் கனிந்த நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நற்காரியங்களைத் தொடங்கும்போது தங்குதடையின்றி சிறப்புடன் நடைபெற விநாயகரை வணங்குவர்.

அவரைத் துதித்து நற்காரியங்களை மேற்கொண்டால் வெற்றியே விளையும் என்பது மக்களின் ஏகோபித்த நம்பிக்கை ஆகும்.

எங்கும் நீக்கமற ஒலிக்கின்ற ஓங்கார நாதத்தின் திருவுருவமான விநாயகப் பெருமான் வேண்டுபவர்களுக்கு வேண்டியதை வழங்கி காத்து அருளு பவர்.

கடிதம் எழுத பிள்ளையார் சுழி, கட்டடத்தில் புக கணபதி ஹோமம், கல்யாணத்தில் மஞ்சள் பிள்ளையார், காவியம் எழுத கணபதி துதி என எல்லாவற்றிலும் முதன்மைக் கொள்ளும் பிள்ளையாரை வணங்கி வழிபடுவோம் என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

# உதைபந்தாட்ட இறுதியாட்டம்

வலிகாமம்

இளவாலை சீத்துப்பந்தி சென். லூட்ஸ் விளையாட்டுக்கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக், யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் என்பவற்றின் ஆதரவுடன் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கழகத் தலைவர் பி.அன்ரனி பாலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பங்குத் தந்தை அருட்திரு ஜே.எ.அருள்தாசன் அடிகளாரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் தலைவர் கிளபெட் அன்ரனிப்பிள்ளை வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் நா.நவரத்தினராசாவும் கௌரவ விருந்தினர்களாக பூநகரி பிரதேச செயலக நிர்வாக அலுவலர் கு.சிவலிங்கம் மற்றும் கிராம அலுவலர் அன்ரனிறோயும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் ஏழாலை ஞான முருகன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

# 'டைஸு' உரிமைப்போர் விளையாட்டிலும் ஜப்பான் வற்மினரனில் சீனா விலகியது

ஜப்பான் ஓப்பன் வற்மினரன் தொடரில் இருந்து சீன அணியினர் முழுவதுமாக விலகினர்.

கிழக்கு சீன கடல் பகுதியில் அமைந்துள்ள "டைஸு" தீவுக்கு உரிமை கொண்டாடுவதில் சீனா, ஜப்பான் இடையே பெரும் பிரச்சினை நிலவுகிறது. இது தொடர்பாக பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ஜப்பானில் துவங்கியுள்ள வற்மினரன் தொடரில் பங்கேற்க இருந்த 22 சீன வீரர், வீராங்கனைகள் விலகியுள்ளனர்.

இதுகுறித்து உலக வற்மினரன் கூட்டமைப்பின் (பி.டபிள்யு.எப்.,) தலைமை அதிகாரி தோமஸ் லண்ட் கூறுகையில், "ஜப்பான் ஓபன் தொடரில் இருந்து சீன வீரர்கள் விலகியது உண்மைதான்," என்றார்.

இதையடுத்து, ஆண்கள், பெண்கள் ஒற்றையர், இரட்டையர் போட்டிகளுக்கான அட்டவணைகள் மாற்றி அமைக்கப்பட்டன.

***கவலையில் நியூசிலாந்து***

நியூசிலாந்து அணி உலகக் கிண்ணப் போட்டியில் தனது முதல் ஆட்டத்தில் பங்களாதேஷை எதிர்கொள்கிறது. இந்நிலையில் அந்த அணியின் முன்னணி வீரர்களான ரிம்சௌதி, ராப்நிக்கோல் ஆகியோருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதனால் அணி நிர்வாகம் கவலையடைந்துள்ளது.

# உமரின் சாதனை மெண்டிஸிடம்



ருவெண்ரி-20 ஆட்டத்தில் புதிய சாதனை படைத்தார் இலங்கையின் பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ். இலங்கையில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய உலகக் கிண்ண ருவெண்ரி-20 போட்டியின் முதல் ஆட்டத்திலேயே இச்சாதனையை அவர் படைத்துள்ளார். இப்போட்டியில் 4 ஓவர்கள் பந்து வீசிய அஜந்த மெண்டிஸ் 8 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 6 விக் கெட்டுக்களைக்கைப்பற்றினார்.

முன்னர் பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர் உமர்குல் இச்சாதனையை படைத்திருந்தார். இவர் 2009ஆம் ஆண்டு நியூசிலாந்து அணிக்கெதிரான ஆட்டமொன்றில் 6 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இருந்ததே ருவெண்ரி-20 போட்டியில் சாதனையாக இருந்தது.

# சூதாட்டகார் ரி.வியில் ஐ.சி.சி கடுப்பில்

சூதாட்ட விவகாரத்தில் தண்டனை பெற்றுள்ள பாகிஸ்தானின் முன்னாள் வீரர்கள் சல்மான்பட், முகமது அமீர் ஆகியோர் நேற்று முன்தினம் உலகக்கிண்ண ருவெண்ரி-20 போட்டி தொடர் தொடர்பாக தனியார் ரி.வி.யில் தோன்றி கருத்து தெரிவித்தனர். இதனால் பாகிஸ்தான் சபையும், ஐ.சி.சியும் அதிருப்தி அடைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# அகில இலங்கை பாடசாலைமட்ட விளையாட்டுப்போட்டி

வடமாகாணத்தில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற விளையாட்டுப்போட்டியில் வட மாகாணத்தில் யாழ் மாவட்ட பாடசாலைகள் அதிகளவான விளையாட்டுக்களில் வெற்றியீட்டியுள்ளன.

வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரங்கள் வட மாகாண கல்வித் திணைக்களத்தின் மாணவர் அபிவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் க.சத்தியபாலனினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

**விபரங்கள் பின்வருமாறு:**

***உதைபந்தாட்டம்***

19 வயதுக்குட்பட்டோர் ஆண்கள் - மன்னார் சென் செவிலியர் கல்லூரி முதலாமிடம், மானிப்பாய் இந்தக்கல்லூரி இரண்டாமிடம்

15 வயதுக்குட்பட்ட ஆண்கள் - யாழ்ப்பாணம் சென் கென்றீஸ் கல்லூரி இரண்டாமிடம்

***கபடி***

15 வயதுக்குட்பட்ட பெண்கள் - யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் முதலாமிடம்,

15 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணி - வவுனியா பரகும் மகா வித்தியாலயம் மூன்றாமிடம்

***உடற்பயிற்சி***

19 வயதுக்குட்பட்ட ஆண்கள் - சென் அன்டனீஸ் கல்லூரி யாழ்ப்பாணம் தீவகம் இரண்டாமிடம், யாழ்ப்பாணம் சென் கென்றீஸ் கல்லூரி மூன்றாமிடம்.

19 வயதுக்குட்பட்ட பெண்கள் - வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி இரண்டாமிடம், யாழ்ப்பணம் மானிப்பாய் பெண்கள் கல்லூரி மூன்றாமிடம்.

# 82 ஓட்டங்களால் இலங்கை வெற்றி

| வீரர் | ஆட்டம் இழப்பு | ஓட். | பந். | 4 | 6 |
|---|---|---|---|---|---|
| டில்சான் முனவீர | ரன் அவுட்-ரெய்லர் | 17 | 19 | 3 | 0 |
| திலகரட்ண டில்சான் | பிடி-ரெய்லர் | 39 | 28 | 5 | 0 |
| மஹேல ஜெயவத்தனா | ரன் அவுட்-ரெய்லர் | 13 | 18 | 1 | 0 |
| சங்கக்கார | ரன் அவுட்-ரெய்லர் | 44 | 26 | 2 | 1 |
| மெண்டிஸ் | ஆ.இழக்காமல் | 43 | 30 | 4 | 1 |
| பெரேரா | ஆ.இழக்காமல் | 06 | 02 | 0 | 1 |
| உதிரிகள் | | 20 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 182/4 | | | |

துடுப்பெடுத்தாடதவர்கள்:- மத்தியூஸ், திரிமன்னே, குலசேகர, அஜந்த மெண்டிஸ்,மலிங்க

| பந்து வீச்சு | | ஓவ | ஓட். | வி. | |
|---|---|---|---|---|---|
| ஜார்விஸ் | | 4 | 31 | 0 | |
| விரோறி | | 3 | 27 | 0 | |
| உத்சயா | | 4 | 25 | 0 | |
| ம்போபு | | 4 | 49 | 0 | |
| கிரிமர் | | 4 | 27 | 1 | |
| சிகும்புரா | | 1 | 13 | 0 | |

| வீரர் | ஆட்டம் இழப்பு | ஓட். | பந். | 4 | 6 |
|---|---|---|---|---|---|
| மஸகட்ஸா | அஜந்த மெண்டிஸ், | 20 | 23 | 3 | 0 |
| சிபண்டா | அஜந்த மெண்டிஸ், | 11 | 16 | 1 | 0 |
| ரெய்லர் | ஸ்ரோம் | 0 | 1 | 0 | 1 |
| சிகும்புரா | அஜந்த மெண்டிஸ், | 19 | 19 | 1 | 1 |
| எர்வின் | ஸ்ரோம் | 10 | 13 | 0 | 0 |
| வாலர் | மெண்டிஸ், | 0 | 2 | 0 | 0 |
| கிரிமர் | மெண்டிஸ், | 17 | 20 | 2 | 0 |
| உத்சயா | அஜந்த மெண்டிஸ், | 1 | 2 | 0 | 0 |
| ஜார்விஸ் | அஜந்த மெண்டிஸ், | 0 | 3 | 0 | 0 |
| விரோறி | ஆ.இழக்காமல் | 7 | 4 | 0 | 0 |
| ம்போபு | மலிங்க | 0 | 2 | 0 | 0 |
| உதிரிகள் | | 15 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 100 சகலவிக்கெட்டுக்கள் | | | |

| பந்து வீச்சு | | ஓவ | ஓட். | வி. | |
|---|---|---|---|---|---|
| குலசேகர | | 3 | 16 | 0 | |
| மலிங்க | | 2.3 | 20 | 1 | |
| அஜந்த மெண்டிஸ், | | 4 | 08. | 6 | |
| மத்தியூஸ் | | 2 | 07 | 0 | |
| பெரேரா | | 2 | 16 | 0 | |
| மெண்டிஸ் | | 4 | 24 | 3 | |

ஆட்டநாயகன்:- அஜந்த மெண்டிஸ்
நாணயச்சுழற்சி:- சிம்பாவே
தேர்வு:- களத்தடுப்பு
அறிமுகவீரர்:- மெண்டிஸ்



# அவுஸ்திரேலியாவுக்கு இலகு வெற்றி

| வீரர் | ஆட்டம் இழப்பு | ஓட். | பந். | 4 | 6 |
|---|---|---|---|---|---|
| போர்ற்றர் பீல்ட் | பிடி-ஸரார்க் | 0 | 1 | 0 | 0 |
| ஸ்ரிறிலிங் | பிடி-வற்சன் | 7 | 12 | 1 | 0 |
| ஜோய்ஸ் | பிடி-வோணர் | 16 | 18 | 3 | 0 |
| ஓபிறைன் | வற்சன் | 20 | 24 | 2 | 0 |
| வில்சன் | எல்.பி.டபிள்யூ | 5 | 5 | 1 | 0 |
| கெவின் ஓ பிறைன் | பிடி-வாடே | 35 | 29 | 5 | 0 |
| கியுஸாக் | ஆ.இழக்காமல் | 15 | 14 | 1 | 0 |
| ஜோன்ஸ்ரன் | ஸ்ரோர்க் | 7 | 7 | 1 | 0 |
| ஜோன்ஸ் | ஆ.இழக்காமல் | 14 | 10 | 0 | 1 |
| உதிரிகள் | | 4 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 123/7 | | | |


துடுப்பெடுத்தாடதவர்கள்:- டோக்றேல், ரன்கின்

| பந்து வீச்சு | | ஓவ | ஓட். | வி. | |
|---|---|---|---|---|---|
| வற்சன் | | 4 | 26 | 3 | |
| ஸ்ரோர்க் | | 4 | 20 | 2 | |
| கியுமின்ஸ் | | 4 | 29 | 0 | |
| மக்ஸ்வெல் | | 2 | 12 | 1 | |
| கிறிஸ்ரெய்ன் | | 2 | 11 | 0 | |
| ஹொக் | | 4 | 22 | 1 | |

| வீரர் | ஆட்டம் இழப்பு | ஓட். | பந். | 4 | 6 |
|---|---|---|---|---|---|
| வோணர் | பிடி-கெவின் ஓ பிறைன் | **26** | 23 | 4 | 0 |
| ஷேன் வற்சன் | ரன் அவுட் | **51** | 30 | 5 | 3 |
| ஹுசி | ஏல்.பி.டபிள்யூ | **10** | 11 | 0 | 0 |
| வைற் | ஆ.இழக்காமல் | **22** | 19 | 3 | 0 |
| பெய்லி | ஆ.இழக்காமல் | **6** | 8 | 1 | 0 |
| உதிரிகள் | | 10 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 125/3 | | | |

| பந்து வீச்சு | | ஓவ | ஓட். | வி. | |
|---|---|---|---|---|---|
| ரன்கின் | | 4 | 28 | 0 | |
| ஜோன்ஸ்ரன் | | 2 | 21 | 0 | |
| கியுஸாக் | | 2 | 10 | 0 | |
| டோக்றேல | | 3.1 | 31 | 1 | |
| ஸ்ரிறிலிங் | | 1 | 13 | 0 | |
| கெவின் ஓ பிறைன் | | 3 | 18 | 1 | |

ஆட்டநாயகன்:- ஷேன் வற்சன்
நாணயச்சுழற்சி:- அயர்லாந்து
தேர்வு:- கதுடுப்பாட்டம்



# இந்திய - பாகிஸ்தான் போட்டிகள் இரு தரப்பு உறவுகளை மேம்படுத்தும்

- ஷாகா அஷ்ரப்

இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நடாத்தப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ள இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேம்படுத்த உதவும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷாகா அஷரப் தெரிவித்துள்ளார்.

2008ஆம் ஆண்டு மும்பையில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலை அடுத்து இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இரு நாடுகள் பங்குபற்றும் கிரிக்கெட் தொடர்கள் இடம்பெற்றிருக் கவில்லை. முத்தரப்புப் போட்டிகளில், உலகக்கிண்ணம் போட்டிகளில் இரு நாடுகளும் சந்தித்திருந்த போதிலும் இரு நாடுகளுக்கிடையிலான கிரிக்கெட் உறவு மோசமான நிலையிலேயே காணப்பட்டது.

இந்நிலையில் இந்தாண்டு டிசெம்பர் மாதத்தில் பாகிஸ்தான் அணி இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான முடிவை இரு நாட்டுக் கிரிக்கெட் சபைகளும் சில மாதங்களுக்கு முன்னர் மேற்கொண்டிருந்தனர்.

இதன்படி பாகிஸ்தான் அணி இந்தியாவில் வைத்து ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், டுவெண்டி டுவெண்டி சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளது.

இந்தத் தொடர் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேம்படுத்துவதில் ஏராளமான பங்கை வகிக்கும் எனத் தெரிவித்த ஷாகா அஷரப், இரு நாடுகளையும் சேர்ந்த ரசிகர்களும் இத்தொடருக்காக எதிர்பார்ப்புடன் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற சர்வதேசக் கிரிக்கெட் சபையின் வருடாந்த விருது வழங்கலின் போது பாகிஸ்தான் அணியின் சயீட் அஜ்மல் விருதுக்கான குறும் பட்டியலில் இடம்பெறாமையைக் கண்டித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையைச் சேர்ந்த எவரும் பங்கு கொள்ளவில்லை என்ற போதிலும், சர்வதேசக் கிரிக்கெட் சபையுடனான உறவைக் கருத்திற் கொண்டு அந்நி கழ்வை முழுமையாகப் பகிஷ் கரிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இன்.'.போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 20.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.